விருதுநகர்
ஸ்ரீ ராதாவில்
விரைவில்
வருகிறது!
V. நாகையா,
மனோஹர், சிவதாணு,
பண்டரிபாய்,
K. ராமசாமி நடித்த

அருணா பிலிம்ஸ்
குமாஸ்தா
(தமிழ்)

வருகிறது!
K. R. ராமசாமி,
P. கண்ணாம்பா,
பண்டரிபாய் நடித்த

AVMன்
செல்லப்பிள்ளை
(தமிழ்)

20 JUL 1955 MADRAS

# மகிழ்ச்சி

சீர்திருத்த மாத இதழ்
ஆசிரியர்: நா. சதானந்தம்
விருதுநகர்.

தி. ஆ. 1984—பங்குனி 1.
ஆண்டு 4] 14-3-53 [மாதம் 10

பொருளடக்கம்

| | |
|---|---|
| நாட்டு நிலவரம் | 3 |
| மறந்திடப்போமா? | 7 |
| முள்—தொடர் கதை | 9 |
| அறிவுப் பூங்கா | 14, 50 |
| என்னைக் கவர்ந்த புத்தகங்கள் கட்டுரைப் போட்டி 5 | 15 |
| படித்தவன்? | 17 |
| கசந்த வாழ்வு | 22 |
| மாணவர் முன்னேற...... | 25 |
| நல்ல தர்மம்! | 26 |
| எண்ணுவீர் ஏழையை! | 28 |
| அந்தச் சிரிப்பு | 30 |
| பாசத்திரை! | 33 |
| தெறித்த முத்துக்கள் | 39 |
| பிரியமுள்ள கணவருக்கு | 41 |
| இதுநிஜமா? | 44 |
| சந்தேகம் ஒழிக! | 46 |
| நான் நடத்தவிரும்பும் தொழில் கார்டு போட்டி 5 | 49 |
| 'நாம்' படவிமர்சனம் | 51 |
| ஞா. சோ. போட்டி 12 | 53 |

கதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

# விருதுநகர் சென்ட்ரலில்

M. G. ராமச்சந்திரன்,
சக்ரபாணி, P. S. வீரப்பா,
V. N. ஜானகி,
P. K. சரஸ்வதி நடித்த

# நாம்

ஜுபிடர் & மேகலா தயாரிப்பு

இப்பொழுது
வெற்றிகரமாக நடைபெறுகிறது!

---

## மகிழ்ச்சி

தனி இதழ் அணா 4
ஆண்டுச் சந்தா ரூ. 3
(தபாலில்)

இலங்கை பூராவிற்கும்
'மகிழ்ச்சி' சோல் ஏஜண்டாக
நாங்கள் ஏற்றிருக்கிறபடியால்
இலங்கையில் சப் ஏஜன்ஸி
எடுக்க விரும்புவோர் எங்களுக்கு
எழுத வேண்டுகிறோம்.

த. தம்பித்துரை,
நியூஸ் ஏஜண்ட்,
நெ. 226 ஆஸ்பத்திரி ரோடு,
யாழ்ப்பாணம். (சிலோன்)

## தனிஅரசு

(மாதமிருமுறை)

ஆசிரியர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி

தனிப் பிரதி 0—2—0
ஆண்டுக் கட்டணம் 3—0—0

கீழ்க்கண்ட ஊர்களுக்கும்
மற்றும் ஏஜண்டு இல்லாத
இடங்களுக்கும்
முன் பணம் கட்டும்
ஏஜண்டுகள்
உடனே விண்ணப்பிக்கவும்:
கோயமுத்தூர், திருச்சி,
கொளும்பு.

தனிஅரசு, விருதுநகர்.

# நாட்டு நிலவரம்

## மொட்டை லட்டர்!

மொட்டை லட்டர் என்ற உடனேயே, இது நேர்மையற்றவர்கள் செயல் என்ற கருத்தை ஒவ்வொருவரின் உள்ளமும் அவர்களை அறியாமலே உணர்த்தியிருக்கும். நேர்மையற்றவர்கள் என்றால் கோழைகள், சின்னத்தனத்தினர், மனத்திடமில்லாத மண்டூகங்கள் என்றுதான் அர்த்தம். இப்படிப்பட்டவர்களின் அநாமதேய, அட்ரஸ் இல்லா தபால்கள்குறித்து யாரும் அதைரியப்படவேண்டியதில்லை. யோக்கியர்களாக இருந்தால், தாங்கள் செய்யும் காரியம் நேர்மையுடையதாக இருந்தால், அதைக் கூற அநாமதேய கடிதங்களோ, பயமுறுத்தல் வார்த்தைகளோ உபயோகிக்க வேண்டியதில்லை அல்லவா?

“ஸ்ரீ ஜெகதம்பாள்” என்று ஆரம்பித்து, ஆங்கிலத்தில்மூன்று வரியில் ஒருசுலோகத்தை எழுதி “இதை ஒன்பதுபிரதிகள் எடுத்து, நீ யாருடையசந்தோஷத்தை விரும்புகிறாயோ அப்பேர்ப்பட்ட உனதுஒன்பதுநண்பர்களுக்கு அனுப்பவேண்டும். அப்படி அனுப்பினால் 10வதுநாள் மனக்கவலை எல்லாம் தீர்ந்து, சந்தோஷச் செய்தி கிடைக்கும். உன் பெயரை எழுதாதே. தபால் வந்த தேதியும், அனுப்பும் தேதியும் மட்டும் குறி.

இத்தொடர்இமயமலையிலுள்ள மகாத்மாஒருவரால் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொடரைக் கத்தரித்துவிடாதே. 9 நாட்களுக்குள் எழுதி அனுப்பாவிடில், உன்னைத் துரதிர்ஷ்டம் தொடரும். இதுஉண்மை. இதைவிளையாட்டாகநினைத்துதொடர்ச்சியை நிறுத்தினால் பாவங்கள் உன்னைச் சூழும். ஒருவன் இதைச் சரிவர நிறைவேற்றியதால் ரூ. 27000 லாபமும், நிறைவேற்றாத ஒருவன் தன் மகனையும் இழந்தான். வீடும் தீப்பற்றியது.”

இப்படி அநாமதேயதபால்கள் பல, நாட்டில் உலாவுவதாக நண்பர்கள் பலர் எழுதியுள்ளார்கள். இப்பேர்ப்பட்டதபால்கள்கிடைக்கப்பெற்றவர்கள் இதுபற்றி இருநிமிட சிந்தனைக்குக்கூட இடம் வைத்துக்கொள்ளாது கிழித்துத் தூர எறிந்துவிடுங்கள்.

நேர்மை உள்ளம் படைத்த தமிழர் நெஞ்சத்தில், இப்படிப் பட்ட ஊர், பெயர் அறிவிக்க இயலாத கோழைக்கும்பல்களின் சூதுமதிக்கு நமது சகோதரர்கள் இடம் கொடுக்கக்கூடாது. நேர்மையான அன்புக் கட்டளைக்கு அடிபணியலாம். ஆனால் அரட்டி, மிரட்டி அர்த்தமற்ற, நாம்விரும்பாத, நம் உள்ளம் ஒப்புக்கொள்ளாதஒன்றைச் செய்யத்தூண்டும் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

# தமிழ் நாட்டின் நஷ்டம்!

சென்னை மாகிலச் சமூகச் சீர்திருத்தச் செம்மல், பட்டிவீரன் பட்டி, W. P. A. சௌந்திர பாண்டியன் அவர்கள், சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் 22-2-53ல் தனது 59வது வயதில் இரவு 7 மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்திகேட்டுத் திடுக்கிடாதார் இல்லை!

இரத்த ஓட்டத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, இருபது நாட்கள் சிகிச்சையில் இருந்த மலைமன்னன், மாண்டுவிட்டார் என்றவுடன் மயங்காத மதுரை மாவட்ட மக்கள் இல்லை!

அன்னாரின் பூத உடல் சென்னையில் முதல்அமைச்சர்ராஜாஜி, பி. டி. ராஜன் M.L.A., N. S. கிருஷ்ணன் முதலியோர்களால் திரு. N. S. K. காரில் பட்டி வீரன்பட்டிக்கு அனுப்பிவைக்கப்பட்டு, மறுநாள் மாலை கி. ஆ. பெ. விசுவநாதம், K. காமராஜ், K. R. ராமசாமி, ஈ. வி. கே. சம்பத், அ. பொன்னம்பலனார், பி. டி. ராஜன், ப. ரா. முத்துசாமி முதலிய சகல கட்சிப் பிரமுகர்களின் கடைசி மரியாதையுடன் அடக்கம்செய்யப்பட்டார்.

சுயமரியாதைக் கட்சிக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் அவராற்றிய பணிகள் அளவுகடந்தது. அவர் நடத்திவைத்த சீர்திருத்தத் திருமணங்களும் அனந்தம். விதவா விவாகங்களில் மிக்க ஆர்வம் கொண்டு, பல திருமணங்களைத் தலைமை தாங்கி முன்னின்று நிகழ்த்திக் காட்டிய தீரர். விவசாயிகளின் தோழர். மறைந்த மாவீரருக்கு நமதுவணக்கத்தையும், அவர் பிரிவால் வருந்தும் அன்னார் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

# உலக நஷ்டம்!

உலகப்பொதுவுடைமைஒன்று பறிபோய்விட்டது! ஜகத்தில் உள்ள செந்நீர்கொட்டும் தொழிலாளர் வர்க்கம் சிரமேற்கொண்டு போற்றிவந்த செஞ்சேனைச் சிங்கம் சோவியத்அதிபர் ஸ்டாலின் அவர்களின் மூச்சு 73வது வயதில் அடங்கிவிட்டது 5-3-53ல்

அவர் பிரிவு அகில உலக பாட்டாளி மக்களுக்கோர் பேரிடி; ஈடு செய்ய முடியாத நஷ்டம்.

மகாத்மா காந்தியடிகளின் மரணத்திற்கு அடுத்தபடியாக அகில உலக மக்களின் ஏகோபித்த அனுதாபத்திற்குள்ளானவர் மார்ஷல் ஸ்டாலின்தான்.

சரித்திரத்தில் முதல் இடம் பெற்ற இந்த இரும்பு மனிதரின் உடல் பக்குவப்படுத்தப்பட்டு, 1924ல் இறந்து இன்று வரை காணும்படியாக கண்ணாடிப்பெட்டியில்வைத்துக் காப்பாற்றப்பட்டு வரும் லெனின் அவர்களின் கல்லறையில், அவர் அருகில் இவரது சடலமும் எல்லோரும் என்றும் காணும்வகையில் 9-3-53ல் அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மறைந்த மாவீரர் ஸ்தானத்திற்கு—பிரதம மந்திரியாக—மாலென்கோவ் நியமனம் பெற்றுள்ளார். வெளிநாட்டு மந்திரியாக மாலடோவும், உள்நாட்டு மந்திரியாக பெரியாவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பிரித்தாளும் சூழ்ச்சிக்காரர்களின் கூற்றுக்கு ஆளாகாமல், மேற்கண்ட தலைவர்களின் ஏகோபித்த அபிப்பிராயங்களுக்கு செவி மடுத்து, ரஷ்யமக்கள் உலகில் சமாதானத்தை நிலைநிறுத்துவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

## மோசடிகள்!

மோசடிகளில் பல ரகங்கள் உண்டு. அரசியல் மோசடிகள் முதல் கவரைப் பிரிக்காமலே கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதாக பத்திரிகைகளில் மக்களை மாக்களாக்கும் மோசடிகள், தீராத நோயைத் தீர்க்கும் தீர்த்த மோசடிகள், ரூபாய் மூன்றுக்கு பத்து வருட உத்திரவாத ரேடியோ, கடிகாரம்போன்று 100க்கு மேற்பட்ட சாமான்கள்கொடுக்கும் ஜலந்தர், அமிர்தசரஸ், லூதியானா ஹம்பக் விளம்பர மோசடிகள் இப்படி எத்தனையோ ரகம் உண்டு. இவைகளெல்லாம் பத்திரிகை விளம்பரங்களைக்கண்டு ஏமாறும் ஏமாளிகளின் தயவால் நீண்டகாலமாக நிகழ்ந்து வருபவை. இவைகளைத் தடை செய்ய அல்லது உண்மையை அறிந்து நடவடிக்கைகள்எடுக்க இதுநாள்வரை அரசியலார் ஒன்றும்செய்யவில்லை

இப்பொழுது புதியதொரு மோசடியும் கிளம்பியிருக்கிறது என்பதை அறிய மிகவும் வருந்துகிறோம்! பத்திரிகை தொழில் நடத்துபவர்களை ஏமாற்றும் ஏஜண்டுத் தோழர்களையும், பத்திரிகைநடத்துவதாக அட்வான்ஸ் பணத்தை ஏப்பமிடும் திடீர் பத்திரிகைக்காரர்களையும்தான்குறிப்

பிடுகிறோம். இவர்களுடன் புத்தகங்கள் வெளியிடுவோரும் இப்பொழுது கிளம்பிவிட்டார்கள். முன்னேறிவரும் தமிழர் சமுதாயத்திற்கு இது மிகவும் அபாயகரமானது எச்சரிக்கிறோம்.

# மந்திரி மாணிக்கவேலரும் மகிழ்ச்சியும்

சென்னை ரெவினியூ மந்திரி மாணிக்கவேலர் நம் 'மகிழ்ச்சி' இதழைச் சுவைப்பாரோ, இல்லேயோ, அதுபற்றி நமக்குத் தெரியாது. ஆனல் முக்கியமான ஒருவிஷயத்தில்மட்டும் மகிழ்ச்சியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, போகுமிடங்களிலெல்லாம் தீவிரபிரச்சாரத்தில் இறங்கியுள்ளார். சென்னை ராஜ்ய மந்திரிகளில் அவர் ஒருவர்தான் "கர்ப்பத் தடையை அனுஷ்டித்தால்தான் ஜனங்கள் அனைவருக்கும் வயிறார சோறுபோட முடியும்" என்ற உண்மையை உணர்ந்து மக்களிடையே வெளிப்படையாகக் கூறிவருகிறார்.

"எங்கள் வடஆற்காடு ஜில்லாவில், வருஷத்திற்கு ஒரு குழந்தை வீதம், வாழை மரம் குலை தள்ளுவதைப்போல பெற்றுத் தள்ளுகிறார்கள். வாழை ஒரு குலை போட்டவுடனேயே அது தன் சக்தியை இழந்து அழுகி விடுகிறது. அதுபோல தாய்க்கு எமன்போல்குழந்தைபிறக்கிறது. ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் தாய் ஒருகண்டத்தில் இருந்து தப்பிப்பதுபோலாகும். ஆண்டுதோறும் 45லட்சம்வீதம் ஜனத்தொகை அதிகரிக்கிறது. கர்ப்பத் தடை செய்தால்தான் ஜனத்தொகை குறையும். நல்ல படிப்பும், சாப்பாடு வசதியும் செய்துகொடுக்கமுடியும்"

இப்படி 9—2—53ல் திருச்சி நகரசபை வரவேற்பின்போது கூறியுள்ளார்.


தஞ்சாவூரில்
நமது மகிழ்ச்சி ஏஜண்ட்;
**வை. ராமசாமி,**
நியூஸ் ஏஜண்ட்,
பழய மாரியம்மன்கோவில் ரோடு,
கீழவாயில், தஞ்சாவூர்.

புதுக்கோட்டையில்
நமது மகிழ்ச்சி ஏஜண்ட்:
**M.பழனி அன் கோ,**
நியூஸ் ஏஜண்ட்ஸ்,
மணிக்கூண்டு,
புதுக்கோட்டை.

சென்னைக்கும், ஏஜண்டு இல்லாத பிற இடங்களுக்கும்
முன்பணம் கட்டும் ஏஜண்டுகள் தேவை!

# மறந்திடப் போமா?

— மதுரைமன்னன் —

அணைந்தது அணைந்தது அறிவியல் நிலவொளி!
இணைந்தது இணைந்தது துன்பியல் மேகம்!
இருண்டது தமிழகம்! இன்பம் மறைந்தது!
மருண்டது மகிழ்ச்சி மனநிலை மயங்கிட,
செய்வது இன்னது என்றறி யாமல்
உய்யும் வழியினை உணர்ந்திட முடியா
நிலையினில் வீழ்ந்தார் நந்தமிழ் நாட்டார்!
அலையினிற் றுரும்பாய் அலைந்தது தமிழகம்!
அன்புளத் தமிழன், அறிவின் தந்தை,
இன்புறத் திட்டம் தீட்டிய மறவன்,
தாழ்ந்தநந் தமிழகம் தலைநிமிர்ந் துலவிட
வாழ்ந்தநல் பட்டி வீரமா நகர்தனில்
குஞ்சுகள் தம்மைக் காத்திடும் கோழியாய்ப்
பஞ்சைகள் உயிர்பல பாதுகாத் திட்டோன்,
சௌந்தர உலகின் சமரசத் தோழன்,
சௌந்திர பாண்டிப் பெருந்தகை நம்மை
விட்டுப் பிரிந்தான் ஏழையர் இதயம்
தொட்டு மகிழ்ந்தே துயரந் துடைத்தோன்!
கலங்கரை விளக்கெனக் கடலில் நின்றோன்,
கலங்கிய மாந்தர் கண்ணீர் சொரிந்திட
மறைந்தார் பாண்டியர்! அணைந்தது தீச்சுடர்!
மறந்திடப் போமா, மறந்திடப் போமா?
கட்டுப் பாட்டின் கடமைக் கெனவே,
பட்டம் பதவியை விட்டுப் பிரிந்தவர்!
நல்வழித் தொண்டன், நந்தமிழ் நாடு
நல்கிய புதல்வன் நம்மருந் தலைவர்,
வசைமொழி வீசியே வாயுரை சாற்றிய
திசையறி யாமலே திகைத்த பல்லோரைச்
செம்மைப் படுத்திய செந்தமிழ்ச் செம்மல்!
தம்மைத் தமிழகச் சிறப்புக் கீந்தோர்,
பகுத்தறி வுலகம் போற்றிட வாழ்ந்தோர்,
உகுத்திடு மொழியில் உயர்வை ஈந்தோர்,
என்றினிக் காண்போம் ஈகையான் தம்மை?
என்றினி விலகிடும் இத்துயர் மேகம்?
என்றுள ஏக்கம் கண்ணீர்த் துளியுடன்
ஒன்றிக் கிளம்பிட உறுதுணை மறைந்தது!
மறந்திடப் போமா, பாண்டிய ஞார்தமை?
மறந்திடப் போமா, மறந்திடப் போமா?

# அட்டைப் படமும் கட்டுரைப் போட்டி 6ம்

இம்மாத அட்டைப் படத்தைக் கண்டவுடன் நேயர்களின் சிந்தனை "எங்கே? எப்பொழுது? எதற்காக? இப்படி இருவரும் அருகில் அமர்ந்திருந்தனர்?" என்று பலவிதமாக குழப்பம் அடைந்திருக்கும். கலக்கம் வேண்டாம். நம் மகிழ்ச்சியின் அட்டையில்தான் இரு துருவங்களை, இல்லை இல்லை, இரு உள்ளங்களை இணைத்துள்ளோம்.

இன்றைய அரசியல் அரங்கில் உழல்பவர்கள் மட்டுமல்ல, சென்னைராஜ்யத்தின் மூலை முடுக்குகளிலுள்ள ஒவ்வொருவருக்கும் காமராஜ்—அண்ணாத்துரை என்றால் தெரியாமல் இருப்பதற்கில்லை. குணத்தால் இருவர், ஆனால் இனத்தால் ஒருவரே இவர்கள்.

இவர்கள் தங்கள் தங்கள் கட்சிகளின் சார்பில் செய்த பணி அளவுகடந்தது. இவர்களின் சேவைகுறித்து "காமராஜ்—அண்ணாத்துரை" என்ற தலைப்பில் 'மகிழ்ச்சி' மூன்று பக்கங்களுக்குள் அமையும்படி எழுதி 30—3—53க்குள் கிடைக்கும்படி அனுப்புங்கள். பிரசுரத் தேர்வு பெற்ற ஒன்றுக்கு ரூ. 3 பரிசளிக்கப்படும்.

விருதுநகர்
நியூமுத்துவில்
சகஸ்ரநாமம், ராமராவ்,
லலிதா, பத்மினி,
ராஜகாந்தம் நடித்த
மருமகள்
இப்பொழுது
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

[கடந்த கதை: பணக்கார ராமனும், ஏழைஜானகியும் ஒருவரையொருவர் காதலித்துக் கல்யாணம்செய்வதாக இருக்கும்போது, ராமர் கொளும்பு போகிறான். ஜானகியின் பாட்டி ஜானகிக்கு வரன் தேடுகிறாள்; ராமன் மாமன் ராமருக்கு பெண் தேடுகிறார். ராமருக்குக் கடிதம் எழுத நினைத்த ஜானகி, தோட்டக்கார தாத்தாவிடம் விலாசம் வாங்கி, கடிதம் எழுதிப் போடுகிறாள். பின்.........]

## 6

**ராமர்**

காதல்!

மூன்றே எழுத்துக்கள்!

அந்த மூன்று எழுத்துக்கள்தான் அகில உலக மக்களை ஆட்டிப் படைக்கிறது. ஆண்டியில் இருந்து அரசன்வரை அந்த மூன்று எழுத்து ஆட்சிக்கு அடிமையாகவே இருக்கின்றனர். காதல் சாம்ராஜ்யத்தை அடக்கி ஆள்வது ஆயுதமல்ல, அன்பு. நானும் ஜானகியும் காதல் ராஜ்யத்தின் பிரஜைகள். இருவரும் அன்புக்கு அடிமைப்பட்டோம். ஆனந்தமாக இணைந்துவாழ கல்யாணம்செய்வதென்று கங்கணம் கட்டியே, கணையாழி மாட்டினேன். வியாபாரத் தொல்லையால் இலங்கை வந்தேன்

தேன்மொழியாள் என் அருகில் இல்லாமல் தினமும் வாடுகிறேன் என்றுதான் ஊர்சென்று என் கற்கண்டைக் காண்பேனா, சுவைப்பேனா என்றுதான் ஏங்குகிறேன்.

காதல் கடிதம் எழுதி எழுதி, கஷ்டத்தைக் கழித்து களிப்பை கூட்டலாம் என்றாலோ, விடுகிறதா, வீணர் சமூகம்? காதல் என்றாலே கெட்ட வார்த்தை என்று பட்டம் சூட்டுகிறது! இந்தநிலையில் காதல்கடிதம் எழு

தினால் உலகமே கெட்டுப்போச்சு என்று ஊளையிடுவார்கள். கண்கள்பிதுங்கக் கடுங்கோபம்கொள்வார்கள்; ஜானகிமீது சாடுவார்கள். ஏழை ஜானகியால் அதை எதிர்க்க முடியுமா?

கூந்தலுக்கு மணம் உண்டு என்று கூறிய சிவபெருமான் கூற்று தவறு என்றாலும், நேர்மையுள்ள நக்கீரனை நெற்றிக்கண் சுட்டெரிக்கத்தான் செய்தது, புராணத்தில். இன்றைய சமூகமும் நேர்மை தெரியாத நெற்றிக்கண்தான். ஜானகியை விபசாரி என்ற விபரீத வார்த்தையால் சுட்டால்? கெட்டவள் என்று தம்பட்டம் அடித்தால்? வீம்பை விலைக்கு வாங்குவதா? அதனால்தான் ஜானகிக்குக் கடிதமே நான் எழுதவில்லை.

அவளையாவது கடிதம் எழுத ஏற்பாடுசெய்திருக்கலாம். இப்போது நினைத்து என்ன பயன்? முன்கூட்டியே இந்த எண்ணம் வந்திருந்தால் விலாசம் கொடுத்திருக்கலாம். அருகிலே அவள் இல்லையேஎன்ற கவலையை அவள் எழுத்துக்களாவது அகற்றியிருக்கும். அவள் இந்தியாவிலும், நான் இலங்கையிலும் என்று விலகியிருக்கும் விசனத்தை—ஜானகியின் காதல் வசனமாவது விரட்டியிருக்கும்.

இப்போது என் கைவசம் இருப்பது வெறும் கற்பனை—கனவு விழித்தால்...விம்முகிறேன்; விடுகிறேன் பெருமூச்சு; படுகிறேன் வேதனை. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த நிலையோ?

நானும் எனக்குள்ளவேலைகளை செய்து முடித்துக்கொண்டே இருந்தேன். புறப்பட்டுவா என்று இன்று கடிதம் வந்துவிடாதா, நாளை வந்துவிடாதா என்று நான் எதிர்பார்த்துப் பார்த்து ஐந்து மாதங்களைப் போக்கிவிட்டேன்.

இந்த ஐந்து மாதங்களில் ஜானகியைப் பிரிந்து நான்பட்ட கஷ்டம் கொஞ்சமா? அன்று சீதையைப் பிரிந்த இராமன், "சீதா! ஜானகி! நீ அப்படியிருப்பாயே! இப்படி இருப்பாயே! இன்பந் தருவாயே! இன்முகம் காட்டுவாயே! உன் தங்கத் திருமேனி கொண்டு இளிப்பை ஊட்டுவாயே!" என்றெல்லாம் அங்கம் அங்கமாக வர்ணித்துப் புலம்பினனம்! நானும் அந்த நிலையில்தான் இருந்துவந்தேன்.

காதலியைப் பிரிந்து ஐந்தாறு மாதங்கள் இருப்பதே கஷ்டமாக இருக்கிறதே, கட்டிய மனைவி, பெற்ற தாய், வளர்த்த தந்தை, பெற்றெடுத்த பிள்ளை ஆகிய எல்லோரையும் பிரிந்து ஆயுட்கைதியாக அந்தமான் தீவிலே—சிறையிலே இருந்தார்களே அரசியல் வாதிகள். அவர்கள் எப்படித்தான் வாழ்ந்தார்களோ? அதை நினைக்கும்போது எனக்குக் கொஞ்சம் ஆறுதல் இருக்கத்தான் செய்தது.

அன்று எனக்கு ஒரு தந்திவந்தது அதில் "உடனேபுறப்பட்டு வரவும், கடிதம் பார்க்கவும்" என்று எழுதப்பட்டிருந்தது.

நான் எதிர்பார்த்தநாள் வந்து விட்டதுகண்டு என்மனம் பூரிப்படைந்தது. தந்தியில்உள்ளபடி நாளை மாமாவின் கடிதம் வரும் அதைப் பார்த்துக்கொண்டு புறப்படவேண்டியதுதான் என்று சாமான்களை தயார்படுத்தினேன்.

என் ஜானகிக்கு துணிமணி வாங்கி வருவதாக முன்பு சொல்லியிருந்தேனல்லவா? அதன்படி வாங்க பஜாருக்குச் சென்றேன். நல்ல சில்க்புடவை ஒன்று ஆறு செஜத்திலே வாங்கினேன். அந்தச் சேலையிலே மீன் கரை போடப்பட்டிருந்தது. ஜானகியின் மீன் விழியை நினைவுபடுத்தும் விதத்தில் அந்தச்சேலையின் அழகு அமைந்திருந்தது. கருப்பு சிகப்பு பட்டு மெத்தை போன்ற பாரீஸ் வெல்வெட் துணியும் ஜானகிக்கு சட்டைக்காக வாங்கினேன். அதன் வழுவழுப்பு ஜானகியின் ஆப்பில்கன்னங்களை நினைவுபடுத்தியது.

மறுநாள் தபால்காரனை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தேன். என் பொறுமையைச் சோதிக்க அவனும்தாமதமாகவே வந்தான். நான்எதிர்பார்த்த என் மாமாவின் கடிதம் இருந்தது. அதை ஆவலோடு பிரித்தேன்.

"'சிரஞ்சீவி' ராமருக்கு எழுதிய க்ஷேமம். கடவுள் கிருபையால் சகல பாக்கியமும் உண்டாவதாகவும். இப்பவும் நேற்றுக் கொடுத்த தந்தி கிடைத்திருக்கலாம். அதன்படி இன்று புறப்பட்டு வரவும்.

உன் கல்யாணத்திற்கு வேண்டிய வேலையை செய்து முடித்துவிட்டேன். பெண்ணும் ஒரு வகையாகப் பேசி வைத்திருக்கிறேன். உனக்கேற்ற பெண் என்று ஜோஸ்யர் சொன்னார். எல்லாவித பொருத்தமும் கூடியிருப்பதாக அழுத்தமாகச் சொல்லுகிறார்.

பெண்ணும் நன்கு படித்திருக்கிறது. இண்டர்மிடியட்வரை நல்லமார்க்வாங்கியிருக்கிறாளாம். பெயர் சொர்ணம். மூக்கும் முளியும் நன்றாக இருக்கிறது. முழங்கால்வரைக்கும் கூந்தல் தொங்குகிறது. சொர்ணம் உனக்குக் கிடைக்க நீ பெரிய அதிர்ஷ்டம் செய்திருக்கவேண்டும்.

தகப்பன் இல்லாத பெண்தான் சொர்ணம். அவள் தாய்க்குப் பின், அவள் சொத்தெல்லாம் உனக்குத்தான் சேரும். சொர்ணத்தின் சொத்துமதிப்பு சுமார் இரண்டு லட்சம் இருக்கும். உன் கெட்டிக்காரத்தனத்தைக் கண்டு, பெண் தர சம்மதித்து விட்டார்கள்.

கல்யாணத்தை எட்டுநாள் ஆடம்பரமாக நடத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள். எல்லாம் உன்னைக் கலந்து சொல்வதாகக் கூறியிருக்கிறேன். நீ உடனே புறப்பட்டு வரவேண்டியது''

இந்தக் கடிதத்தைக் கண்டவுடனே எனக்குப் 'பகீர்'என்று இருந்தது. என்நினைப்பு தகர்ந்துவிடுமோ என்ற சந்தேகம் தோன்றியது. இந்தியாவுக்குப் புறப்பட கப்பலில் ஏறி, அது இந்தியா போகாமல் அந்தமான் தீவுக்குப்புயலால் இழுத்துச்செல்லப்பட்டால்? என் மனம் அப்படித்தான் வேதனைப்பட்டது. இருந்தாலும் நான்தைரியத்தைக் கைவிடவில்லை.

உடனே ஊருக்குப் புறப்பட்டுப் போய், ஜானகியை காதலிக்கும்விபரத்தை மாமாவுக்குக்கூறி மாமா செய்திருக்கும் கல்யாண ஏற்பாட்டை தடுக்க முடிவுசெய்தேன். மாமா ஓரே பிடிவாதமாக சொர்ணத்தை மணக்கச் சொன்னால், அதற்கு அடிபணியாமல், சண்டைபோட்டாவது ஜானகியை கல்யாணம் செய்து கொள்வது என்று பலமான உறுதி செய்துகொண்டேன்.

இந்தியாவுக்கு விமானத்திலேயே புறப்பட்டேன். நான் புறப்படுவதற்குமுன், என் பெட்டி படுக்கைகளைச் சோதனையிட்டு, நான் ஜானகிக்காக வாங்கிய துணிகளுக்கு அரசாங்க அதிகாரிகள் வரிகட்டவேண்டும் என்று சொன்னார்கள். ஜானகிக்காக என் வாழ்வையே காணிக்கையாக நான் செலுத்தத் தயாராய் இருக்கும்போது கேவலம் வரி கட்ட தயங்குவேனா?

வரி என்பது ஆட்சிபீடத்தின் மூச்சு! அது இல்லாவிட்டால் அரை கொடிகூட அரசாங்கம் ஜீவித்திருக்க முடியாது. உடல், பொருள், ஆவி ஆகியவற்றை அர்ப்பணிக்கும் தியாக மனப்பான்மைதான் காதலின்சத்தான உணவு. அவையில்லாவிட்டால் காதல் வாழ்வு செத்தேபோகும். ஏழைஜானகிமீது நான்கொண்ட காதலுக்காக என் பொருளை—சொத்தை ஏன், உயிரையே தூக்கி எரிய பின்வாங்கலாமா? ஜானகிக்காக என் மாமாவைமட்டுமல்ல, மண்டலத்திலே உள்ள மக்கள் அனைவரையும் எதிர்த்திடும் துணிவோடுதான் விண்ணிலே பறந்துகொண்டிருந்தேன்.

தமிழகத் தரையை விமானம் முத்தமிட்டது. அதில் தான் எவ்வளவு இன்பம். சொர்க்கத்தின் எல்லையிலே காலைவைத்துவிட்டேன். விரைந்து சென்று

ரயிலேறி, சொர்க்க தெய்வமான ஜானகியை காணவேண்டும் என்ற வெறியோடு வேகமாகச் சென்றேன். ஊர் நெருங்கும்போது 40 மைல் வேகத்தில் வந்து கொண்டிருந்த எக்ஸ்பிரஸ்கூட, திடீரென்று நின்றுவிட்டது. ஏன் என்று அறிய எட்டிப் பார்த்தேன். கைகாட்டி இறங்காமல் இருந்தது. எனக்கு ஏனோ பயமாக இருந்தது.

இரயில்பாதையிலே கைகாட்டி மரம் இருந்துகொண்டு, வேகமாக வந்துகொண்டிருந்த இரயிலைத் தடுத்து நிறுத்தியதைப்போல, வாழ்க்கைப் பாதையிலே ஏதேனும் ஒன்று என் உறுதியை உடைத்துவிடுமா? இதைநினைக்கும்போது எனக்குத் திகிலாகத்தான் இருந்தது.

கைகாட்டி இறங்கியதும் புறப்பட்ட ரயில் முன்போல் வேகமாக ஓடவில்லை. இரயில்பாதையிலே ரிப்பேர் இருந்ததால் மிகவும் மெதுவாக, சோர்ந்துபோய் நகர்ந்துநகர்ந்து சென்றது, வாழமுடியாத துக்கத்தால் வாழமுடியாதவர்கள் நடப்பதுபோல

இரயில்வேநிலையமும் வந்தது. என் தந்தியின்படி என்னைக் காண மாமா காரில் இரயில்நிலையத்திற்கு வந்திருந்தார். நான் வண்டியில் இருந்து இறங்கியதும் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு..."என்ன மெலிந்திருக்கிறாய்?" என்று, என்னை மாமா கேட்டார்.

"ஜானகிமீதுள்ள ஏக்கத்தின் விளைவு" என நான் சொல்லமுடியுமா? சாப்பாடு சரியில்லை என்று பொய்யை சொல்லிவைத்தேன். இருவரும் காரில் ஏறினோம். வியாபார விஷயங்களை மாமா விசாரித்தார். கல்யாண விஷயம் பற்றி அவர் பிரஸ்தாபிக்கவே இல்லை. நானும் ஜானகியைக் கலந்துகொண்டு ஒரு முடிவுக்கு வந்தபிறகு பேசலாம் என்று மௌனமாக இருந்துவிட்டேன்.

கார் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. ஜானகிவீட்டை கார்கடக்கும்போது கடைக்கண்ணால், மாமாவுக்குத் தெரியாமல ஜானகி வீட்டைப் பார்த்தேன். யாருமே என் கண்களுக்குப் புலப்படவில்லை.

வீட்டுக்கு வந்ததும், "குளித்துவிட்டு சாப்பிடு. நான் வெளியில் போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, மாமா காரிலேயே புறப்பட்டுவிட்டார். ஜானகியைக் காண விடுதலை கிடைத்

## ஜப்பானில் ஆண்கள் பஞ்சம்!

ஜப்பானில் ஆண்களைவிட பெண்களின் ஜனத்தொகை அதிகரித்துவிட்டதால், பலபெண்கள் இன்பமான குடும்ப வாழ்க்கைக்கு வசதியின்றி தொழிற்சாலைகளில் வேலை செய்து பிழைக்க வேண்டியிருக்கிறதென்று கல்கத்தாவுக்கு விஜயம் செய்துள்ள ஜாப். பார்லிமெண்டு ஸ்திரீமெம்பர் மிஸ் ஷாக்கானி கூறினார்.

தது என்றுஎண்ணி துடிதுடித்து மாடிக்குஓடினேன். பார்த்தேன்; பார்த்துக்கொண்டேஇருந்தேன்.

கடுமையான வெய்யிலின் கானல்கூட தூரத்துப் பார்வைக்குத் தண்ணீர்போல் காட்சியளிக்கும்; ஆனால் அகலாத அன்பு என் இதயத்தில் இருந்தும், ஜானகியின் நிழல்கூட எனக்குத் தெரியவில்லை. அரைமணிநேரத்திற்கு மேலாக அங்கு நின்றுகொண்டே பார்த்தேன்; ஆடி அசையும் செடிகொடிகூட, அசையாமல்ஸ்தம்பித்துநின்றன.

அப்போது யாரோ மாடிக்கு வருகிற கால் சப்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். தோட்டக்காரத் தாத்தா வந்தார். "வெந்நீர் சூடு ஆறுதுங்க. சீக்கிரம் குளிக்கவாங்க'' என்று என்னைப் பார்த்துக் கூப்பிட்டார்.

"தாத்தா! இந்த வீட்டிலே இருக்கும் பாட்டியும், அவள் பேத்தி ஜானகியும் சௌக்கியமாக இருக்கிறார்களா?'' என்று துணிந்து, ஆனால்,சாதுர்யமாகக் கேட்டேன்.

'நல்ல சௌக்கியமுங்க. அந்தக் குட்டி ஜானகிக்கு கல்யாணமாகி நேற்றுதான் புருஷன்வீட்டுக்கு கிராமத்துக்குப் போறு!'' என்று தாத்தா சொன்னார்.

என் தலை சுழன்றது. கண்கள் இருண்டன. ஜானகி! ஜானகி! என்று வாய் முணுமுணுத்தது. கால்கள் செயலற்றுப்போயின.

(தொடரும்)

# அறிவுப் பூங்கா

## கலையுலகில் கருணாநிதி

தீட்டியவர்: மதுரைமன்னன்

கிடைக்குமிடம்:

செல்வம் பதிப்பகம், மதுரை.

பக்கங்கள் 30 :: விலை 4 அணா

6—6—1924ல் பிறந்து, குறைந்த வயதிலேயே, தமிழ் நாட்டு மக்களின் கவனத்தைச் சினிமாக் கலைமூலம் கவர்ந்த திரு. மு. கருணாநிதியின் கலைச் சேவையின் படிப்படியான வளர்ச்சியைக்குறித்துசுருக்கமாக விளக்கப்பட்டிருக்கிறது.

## இரத்த விருந்து

ஆசிரியர்: அமுதன்

பொதுமறைப் பதிப்பகம்,

மாங்காடு, பூவிருந்தவல்லி P.O.

பக்கங்கள் 20—விலை 4 அணா

இச் சிறுகதை படிப்பதற்குச் சரளமாக இல்லாதபடி, அனாவசிய, அர்த்தமற்ற அடுக்குச் சொற்களால் கரடுமுரடாக்கப்பட்டிருக்கிறது. கதையும் கருத்தும் நன்றாகவே கோர்க்கப்பட்டிருக்கிறது.

5வது போட்டி பரிசுக்கட்டுரை

# என்னைக் கவர்ந்த புத்தகங்கள்

எஸ். எத்திராசன்—ஆரணி

என் சிறுவயதிலே சரித்திரப் புத்தகங்கள் என்னைக் கவர்ந்தன. பள்ளிப் பருவத்திலேயும் வரலாற்றுச் சுவடிகளும்—வரலாறு தழுவிய கதைகளும் என்னைக் கவர்ந்தன. இன்றும் வரலாற்றுச் சுவடிகளை சுவைத்து மகிழ்கிறேன். எனினும் வாழ்க்கையைப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டும் புத்தகங்கள் தான் என்னை அதிகமாகக் கவர்கின்றன. இன்றைய மறுமலர்ச்சி இலக்கியங்கள் என்னை வெகுவாக கவர்கின்றன.

மராட்டிய எழுத்தாளர் திரு. வி. ஸ. காண்டேகரின் நூல்கள் என் இதயவானிலே இன்னிசை கீதம் பாடித் திரிகின்றன. என்னைக் கவர்ந்த அவருடைய புத்தகங்கள்: 'வெறுங்கோயில், சுகம் எங்கே, இரு துருவங்கள், கருகிய மொட்டு, மனோரஞ்சிதம்' முதலிய நூல்கள். கருகிய மொட்டு நாவலில் காண்டேகர் இவ்வாறு கூறுகிறார்: "மனோரஞ்சிதத்தின் மணத்தை நாம் தொலைவிலிருந்துகூட அனுபவிக்கமுடியும்; அதேபோல் காதலையும்!" இக்கருத்து எவ்வளவு உண்மையென்று சொல்லவேண்டியதில்லை. காதல் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் அதை எண்ணி எக்களிப்பதைப்போல, காண்டேகரின் நூல்களை விளம்பரத்தில் காணும்போதே அவைகள் என்னைக் கவர்ந்து களிப்புக் கொள்ளச் செய்கிறது.

அடுத்து என்னைக் கவர்ந்த புத்தகங்கள்: '12ம் நம்பர் பஸ், ஆசா' ஆகியவைகள். இதன் ஆசிரியர் திரு. நா. சி. பட்கே அவர்கள். நான் இந்த இரண்டு புத்தகங்களைத்தான் படித்தேன். என்னை இவைகள் வெகு இலகுவாகக் கவந்துவிட்டன.

பிரஞ்சு எழுத்துலக சிற்பி விக்டர்யூகோவின் நூல்கள் என்னைக் கவர்ந்தன. அவருடைய 'மரகதம்' என்னைவிட்டு என்றும் விலகாதவளாகிவிட்டாள். 'இளிச்சவாயன்' என்னை சிந்தித்துநினைந்து இன்புறச் செய்கிறது இன்றும். 'ஏழைபடும்பாடு' என் உள்ளத்தில் செதுக்கி வைக்கப்பட்ட சமூக சிலையாக இருக்கிறது.

'சாக்கவான் செட்டி, மிருக வாழ்க்கை, சந்தியா' அமெரிக்க எழுத்தாளர்-சோஷியலிஸ்ட் அப்டேன்சிங்கிளேர் அவர்களால் ஆக்கப்பட்டது. என்னை எழுச்சி கொள்ளச் செய்த புத்தகங்களில் மேலேயுள்ள முறையே இரண்டு

புத்தகங்கள் தலையாயன. அவர் அமெரிக்க சோஷியலிஸ்டாக இருக்கலாம். ஆனால் 'திராவிடத்தின் திராவிடஇயக்க முன்னணி முரசு' அவர்!

அடுத்து அறிஞர் அண்ணாவின் இலக்கியப் பாதை என்னை இழுத்துச் சென்றுகொண்டிருந்தது. அவர் அமைத்துத் தந்த இலக்கியப் பாதையில் பீடுநடை போட்டுச் செல்லும் இலக்கிய எழுத்துச் செல்வர்களின் புத்தகங்களே என்னைக் கவர்கின்றன.

சிந்தனைச் செல்வர் திரு. டி. கே. சீனிவாசனின் புத்தகங்கள் என்னைக் கவர்ந்தவைகள். அவரின் 'உலக அரங்கில்' அற்புதமான சிறுகதைத் தொகுப்பு. இதைவிட என் இதயத்தைஈர்த்த அவருடைய புத்தகம் 'ஆடும் மாடும்'தான்! "கன்றுக்காக இருக்கும் பாலைத் திருடுவதால் தான் நாம் பசுவை பூசைசெய்து ஏமாற்றுகிறோமா?" "பிழைப்புக்கும் புகழுக்கும் கலை விபச்சாரியாக்கப்படுவதைவிட, இந்த பிரசாரத்துக்கும் பயன்படுவது எத்தனையோமடங்குமேல்!" இப்படிச் சமூகத்தில் சதிராடும் நிகழ்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டுவதில் சிறந்தவர் அவர்.

சிந்தனை எழுத்தாளர் திரு. தில்லைவில்லாளனின் நூல்கள் என் உள்ளத்தில் புதைந்துவிட்டன. அவருடைய அருமையான படைப்புகளான என்னைக் கவர்ந்த புத்தகங்களில் சில: 'மனப்போர், தங்கத்தாமரை, இருளும் ஒளியும், அத்திப்பூக்கள், அந்தப்புரம்.' இவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள், இலட்சிய சிந்தனைகள், அருவியென ஓடும்—இவர் கையாளும் தெள்ளுதமிழ் நடை என்னைக்கவர்ந்துவிட்டன.

'இளவரசி, மனப்புயல், பொற்சிலை' இவைகள் மணம் வீசும் மலர்கள், நான் தேன் குடிக்கும் வண்டு! மேலேயுள்ள புத்தகங்கள் திரு. இராதாமணாளனின் எழுத்தோவியங்கள். 'மூடுபனி, பாலைவனம், சபதம், அன்னம்' இன்னும் நிறைய நூல்கள் இவருடையது. என்னைக் கவர்ந்த புத்தகங்களில் இவருடைய நூல்கள் அனைத்தும் இடம்பெறுகின்றன.

'வானம்பாடி, நரகவாசலிலே' என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட இலக்கியச் சுவடிகள். 'கானகத்திலே காதல், செல்வகுமாரி, அழகுநிலா, பைத்தியக்காரன் நாட்குறிப்பு' என்னைக் கவர்ந்த புத்தகங்கள். இந்த இலக்கியச்செல்வங்களின்படைப்பாசிரியர் திரு ரா. தணலன் அவர்கள்.

---

நன்றி

முக்கூடல்
பீடிச்சக்கரவர்த்தி
"த. பி. சொக்கலால் பீடி"
தினசரிக் காலண்டர்கள்
கிடைக்கப்பெற்றோம்.

# படித்தவன்?

(மகிழ்ச்சி சதானந்தம்)

"படித்தவனும், படித்தவன்! பட்டப் பகலில் பலர் முன்னிலையில், பஜார் மத்தியில் விட்டு 'பளார், பளார்' என்று சவுக்கால் அடிக்கவேண்டும் படுவாப்பயலை! கழுதை களவாணிப் பயல், கல்லூரியில் படித்துப் பட்டம்வேறு வாங்கிவிட்டான், பட்டம்! இவனைப்போல் படித்தவன் எல்லாம் இப்படியா தறுதலையாகத் திரிகிறான்கள்? நல்லவர்கள் பெயரைக் கெடுக்கும் இப்படிப்பட்ட நச்சரவங்களை நாட்டில் நடமாட விடுவதே தப்பு! சமூகத்திற்குத் துரோகம் இழைத்து, உயர்ந்த முறையில் நடைபெற்று வரும் பரம்பரைப் பண்பாட்டைத் தகர்க்கும் இச்சண்டாளர்களை சந்திக்கிழுத்து சகலரும் காறி உமிழும்படி செய்தால்தான் அடுத்தவர்களுக்காவது படிப்பினையாக இருக்கும்.

பணக்காரனுக்கும், படிப்பிற்கும் அநேகமாக சம்பந்தமிருப்பதில்லை. தவறாக எப்படியோ தத்திப்புத்தி படித்து B. A., M. A., M. B., B. S. என்று பட்டம் வாங்கிவிட்டாலோ பின் கேட்கவேண்டாம் சிலர் செய்யும் ஆர்ப்பாட்டங்களையும், அட்டகாசங்களையும். எல்லாம் அந்தப் பணம் செய்கிற வேலை. இல்லாவிட்டால் இந்தப் பயல் இப்படி நடப்பானா?

'என்னுடைய தகுதிக்கு ஏற்றார்போல் உனக்குப் படிப்பு இல்லை. படித்த நான்கு 'பிரண்ட்ஸ்'கள் பார்வையில் படும்படி உன்னை அழைத்துச்செல்ல எனக்கு அவமானமாக இருக்கிறது. உன்னுடைய நடவடிக்கைகள் பூராவும் கர்னாடக சங்கீதம் போல் கர்ணகடூரமாகத் தோன்றுகிறது. அதிகம் வர்ணிக்க விரும்பவில்லை. பட்டணத்தில் என்னுடன் இணையாக வாழ உனக்கு பல வகைகளில் தகுதி இல்லை. எனவே இனி என்னை மறந்துவிடவேண்டியதுதான்'

இப்படி, கல்யாணம் கட்டிய ஆறுவது மாதத்தில் ஒரு படித்துப் பட்டம் பெற்றவன் தன் மனைவிக்கு எழுதுவானானால், அவனை முட்டாள், படித்தமுட்டாள், கயவன்; கன்னியரின் களங்கமற்ற உள்ளப் பண்பை அறியாது, புற அழகில் நாட்டம் கொண்டு, ஒரு நங்கையின் நல்வாழ்வைக் கெடுக்கும் நயவஞ்சகன்; என்று கூறாது வேறு எப்படிக் கூறமுடியும்?

அறிவின் திறனைப் பரீக்ஷித்து ஆண்டுதோறும் வகுப்பு மாற்றுகிருர்களே கலாசாலை, கல்லூரிகளல்; அதுபோல, ஆறுமாதம், ஒரு வருடம் பரீக்ஷித்து ஒத்துவராது என்று ஒதுக்கி விடும் பொருளா மனைவி? அட மரமண்டையனே!

சிறப்புப் பாடம் (optional) போன்றவள் மனைவி. நாமாக நம் அறிவின் திறமைக்கும், வருங்கால நோக்கத்திற்கும் ஏற்றுர்போல, குறிப்பிட்ட சிறப்புப் பாடத்தை கலாசாலையில் தேர்ந்தெடுத்து, கல்லூரிப் படிப்பு முடியுமட்டும் படித்து, அதன் தொடர்பு கொண்ட தொழிலை மேற்கொண்டு வாழ்வை நடத்துவதுதான் உலக இயல்பு. அதுபோலவே குடும்பம் என்ற கல்லூரியில், தன்நிலைக்கேற்ப தகுந்த பெண்ணைத் தேடி எடுத்து, ஆயுட்காலம் பூராவும் வாழ்வை அழகுற நடத்துவதுதான் நம் தமிழர் கலாச்சாரம்; பண்பு. இது கூடத் தெரியவில்லையே இந்தப் படித்த தற்குறிக்கு!

'என்னுடைய தகுதிக்கு ஏற்றுர்போல் உனக்குப் படிப்பு இல்லை. பிரண்ட்ஸ்கள் முன் அழைத்துச்செல்ல அவமானமாக இருக்கிறது' அப்படி இப்படி என்று ஏதேதோ இவன் பிதற்றி இருக்கிருனே; ஆம்! என் தங்கைக்கு அவன் விரும்பும் படிப்பு இல்லைதான்! பட்டணத்து வீதிகளிலே பாதி உடம்பு தெரியும்படி பகட்டித் திரியும் பாஷன் படிப்பு இல்லைதான்! கையில்லா சட்டையுடன் கடற்காற்று வாங்க பீச்சுக்குச் செல்லும் காரிகைகளின் படிப்பு இல்லைதான்! நாட்டியக்காரிபோல் வயிறு தெரிய உடை அணிந்து, வளையம் வரும் படிப்பு என் தங்கைபடிக்கவில்லைதான்! இதை எல்லாம் இந்தத் துரைமகன் அன்று—விவாகத்திற்குமுன் அல்லவா கவனித்திருக்க வேண்டும். என் தங்கையை நேரில் வந்து பார்த்துத்தானே செய்தான். இவன் மட்டுமா? இவன் சகோதரிகள், தாய்தந்தையர் அனைவரும்தானே வந்து கால் சுண்டுவிரல் முதல், தலை உச்சி மயிர் வரை, ஒரு முறைக்கு மும்முறை கவனித்துத்தானே ஏற்பாடு செய்தார்கள். இன்று இதோபதேசம் செய்யும் உத்தமன், அன்றே அல்லவா மறுத்திருக்கவேண்டும்! ஊரைஏமாற்றித் திரியும் இந்த ஊதாரியின் பணத்திலும், படிப்பிலும்மயங்கி என் தந்தை தடுமாறிவிட்டார்''

இப்படி எழுதிக்கொண்டிருக்கும்போது ''என்ன மிஸ்டர் குமார், என்ன எழுதிக்கொண்டிருக்கிருய்?'' என்று கேட்டுக்கொண்டே அவன் நண்பன் பிரதாபன் அவன் அறைக்குள் நுழைந்தான்.

''வேறு ஒன்றுமில்லை. சும்மா அப்படியே ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருந்தேன்''

"ஏதாவது பத்திரிகைக்கு அனுப்பவா?"

"அப்படி ஒன்றுமில்லை. உண்மையை எழுதினால் அதைப் போடக்கூடிய பத்திரிகைகளும், அப்படியேபோட்டாலும் வாசித்து அதன் ஆழ்ந்த கருத்துக்களை உணர்ந்து நடக்கக்கூடிய வாசகர்களும் நாட்டில் எங்கு இருக்கிறார்கள் பிரதாப்?"

"அப்படி என்னப்பா உண்மையைஎழுதிவிட்டாய்? எங்கே பார்க்கலாம்" என்று கூறிக் கொண்டே மேஜையில் கிடந்த கட்டுரையை எடுத்துப் படித்து முடித்தான்.

"குமார்! இது உங்கள்குடும்ப ........."

"ஆமாம் பிரதாப்! எங்கள் குடும்ப விஷயம்தான்! எங்கள் குடும்பத்திலென்ன? நாட்டில் இன்று பல குடும்பங்களில் இப்படித் திருவிளையாடல்கள் நடைபெறத்தான் செய்கின்றன"

"இருந்தாலும், ஒரு படித்த பையன் இப்படியா நடந்து கொள்வது?"

"படிப்பு மட்டுமல்ல, அத்துடன் பணமும் சேர்ந்திருக்கிறது பார், அந்தத் திமிர்!"

"இது பற்றி லேசாக என் காதில் விழுந்தது. ஆனால் நான் யாரோ வேண்டுமென்று கட்டிவிட்டிருக்கிறார்கள் என்றுதான் நினைத்தேன். நாலு பெரியமனிதர்களை அனுப்பி விசாரிக்கச் சொல்லக்கூடாது?"

"மனிதனாக இருந்தாலல்லவா நாலு பெரிய மனிதனின் வார்த்தைக்குக்கட்டுப்படப்போகிறான். மிருகத்திற்கு—கண்ட கண்ட பெண்களைச் சுற்றித் திரியும் காமப் பிண்டங்களுக்கு—அறிவு எங்கிருந்து வரும்?"

"அவனுடைய தாய்தந்தையர் என்ன கூறுகிறார்கள்?"

"அவர்கள் உணர்கிறார்கள். மானம் மரியாதைக்கு அஞ்சுகிறார்கள். குல அவமானத்தை எண்ணிக் கலங்குகிறார்கள். ஆனால் அந்தப் பிடாரியைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறார்கள்"

"முதலிலேயே கொஞ்சம் கவனித்து கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தால் இவ்வளவு தூரம் சிரமம் இருந்திருக்காது!"

"இவ்வளவு ஆழத்திற்கு எப்படிக் காண முடியும்? அவர்களோ பட்டணவாசிகள். 450 மைல்களுக்கு அப்பால் நாம்

## பெண்ணை கேலி செய்தவன் கழுதை மீது ஊர்வலம்!

லாகூர் குவிலாகுஜார்சிங் பிரதேசத்தில் ஒரு பள்ளிக்கூட மாணவியைத் தகாத முறையில் கேலி செய்த இளைஞன் ஒருவனை முகத்தில் கரிபூசி, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி கழுதைமீது ஏற்றிவைத்துஅப்பகுதியில்உள்ள முக்கிய தெருக்களில் ஊர்வலமாகக் கொண்டு சென்றார்களாம்.

இருக்கிறோம். அவர்கள் குடும்பத்தைப்பற்றித் தெரிந்து புகழ்ந்தவர்களின் சொல்லை நம்பமுடிந்ததேதவிர, அவன் குணத்தைப் பற்றி அறிய என் தாய் தந்தையருக்கு நேரமில்லை. பணக்காரன் படித்துப் பட்டம் பெற்றவன் என்றவுடன் என் தாயாரைக் குளிர் ஆட்டிவிட்டது. எப்படியும் சியாமளாவின் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்று ஒரு காலில் நின்றுவிட்டார்கள்''

"ஏன், நீயாவது விசாரித்திருக்கக்கூடாதா?''

"இளைஞன் சொல் அம்பலம் ஏறுமா? ஆனாலும் எங்கள் குடும்ப பொருளாதாரத்தை யொட்டி ஒன்று இரண்டு கூறினேன். 'அயலூர் சம்பந்தம் என்பதால் குற்றமொன்றுமில்லை என்றாலும், ஒரு நல்லது பொல்லது என்றால் உடன் புறப்பட்டுச் செல்வதற்குப் பணம் எந்த நேரமும் கையில் வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். சீர்வரிசைகள் வேறு அந்தஸ்திற்கு ஏற்ப செய்ய வேண்டும். இன்றைய நம்வருவாய் சாப்பாட்டளவிற்குத்தான் சரிக்கட்டி வருகிறது. ஆகவே நன்கு யோசியுங்கள். மேலும் அவர்கள் பணக்காரர்கள்; நினைத்த இடத்தில் பெண் எடுக்கலாம். இருந்தாலும் நம்வீட்டில் வந்து எடுக்கவந்துள்ளார்கள். எனவே சற்று நன்றாக பையனைப்பற்றி விசாரித்து...' என்று நான் கூறுவதற்குள், 'படித்த பையன், அப்படி ஒன்றும் நீ நினைப்பதுபோல் மோசமாக இருக்கமாட்டான். நம் சியாமளாவின் அழகில் ஒரே கிறுக்காக அவர்கள் சுற்றிச்சுற்றி வருகிறார்கள்' என்று அடித்துப் பேசி முடிவு செய்துவிட்டாள் என் தாய். அவ்வளவுதான் அதற்குமேல் நடக்கவேண்டிய காரியங்களில் நானும் பரிபூரணமாகக் கலந்துகொண்டேன்''

"ஆமாம், இனி என்ன செய்வதாக உத்தேசம்? கேஸ் போட்டால்......''

"ஜீவனாம்சத்திற்கு மாதம் இருபதோ, இருபத்தைந்தோ கொடு என்று தீர்ப்பு கூறுவார்கள் சட்டப்படி. 18 வயது நிரம்பாத பாலகி; உதட்டிலே உணர்ச்சி, உள்ளத்திலேகிளர்ச்சி கொண்டு தவிக்கும் என் தங்கைக்கு அது போதுமா? கணவனே தெய்வம் என்றுகொண்டாடும் நம் தமிழ்த் தங்கையருக்கு பணமா பெரிது?

ஒரு ஆடவன் மனைவி இருக்க மறு விவாகம் செய்துகொள்ள வேண்டுமானால் ஒன்று அவள் பெரும் வியாதிக்குட்பட்டவளாக இருக்கவேண்டும். அல்லது குழந்தை அற்ற மலடியாகஇருக்க வேண்டும். இப்படி இருந்தால் கூட அநேக ஆடவர் மனைவி இருக்க மறுமணம் செய்யவிரும்பாது கௌரவமாக நடந்து கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த மூர்க்கன் கூறும் காரணங்களைப் பார்த்தாயா?' எனக்கிருக்கும்

கோபத்திற்கு, அவன் என் எதிரிலிருந்தால் என்ன செய்வேனே எனக்கே தெரியாது!

இப்படிக் குற்றமற்ற பெண்களை ஒதுக்கும் வெறியர்கள் குறித்து சட்டம் கடுமையாக்கப் படவேண்டும். வெறும் ஜீவனும்சத்துடன் நிற்கக் கூடாது. அபராதமின்றி ஐந்து அல்லது பத்துவருடக் கடுங்காவல் என்று இருக்கவேண்டும். அப்பொழுது தான் பெண்களை இச்சைப் பொருளாகக் கருதும் இவன் போன்ற பேயர்களின் கொட்டம் ஒடுங்கும்''

"அப்படிப்பட்ட முற்போக்குச் சட்டம்தான் இல்லையே! அது கிடக்கட்டும் நீ என்ன தான் செய்யப்போகிறாய்?''

''செய்வதென்ன? விதவைகளின் துயர் நீக்க மறுமணங்கள் வேண்டுமென்று கிளர்ச்சிசெய்ய நாட்டில் முற்போக்கு அறிவியக்கங்கள் தோன்றியுள்ள இக் காலத்தில், கணவன் இருந்தும் என்தங்கை 'விதவை' வாழ்க்கை வாழ வைத்துப் பார்த்துக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. என் தங்கைக்காக என்னையே தியாகம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன். நிழல்போல் அவன் செல்லுமிடங்களிலெல்லாம் தொடர்வேன். அவன் நண்பர்களிடமெல்லாம் அவனது நாணயத்தைக் கூறுவேன். அவனது சல்லாப சிங்காரிகளைச் சந்தித்து சங்கதிகளைக்கூறி ஒதுங்கி ஓடப் பயமுறுத்துவேன். எவளோ ஒருவளை மனைவிபோலவே வைத்துள்ளானும். அவளிடம் போய் என்தங்கையின் நிலையைக் கூறி 'ஒரு பெண்ணின் உள்ளத்தை மற்றொருபெண்தான் அறிய முடியுமென்பதை' உணர்த்தி பரிகாரம் தேடுவேன்.

ஒன்றுக்கும் சரிப்பட்டு வராவிடில் என் வாழ்வைப் பணயம் வைக்கும் முறையில் ஈடுபட்டு விடுவேன். என் கபடமற்ற— சூதுவாதுதெரியாத, தங்கையின் வாழ்வைக் கெடுத்த அயோக்கியனை......''

"குமார்! சற்று நிதானித்து காரியங்களை மேற்கொள்... உன்னைப்போன்று ஓரிருவராவது கிளம்பாவிட்டாலும், இந்த உன்மத்தர்கள் கொட்டம் ஒடுங்காது. என்னல் உன் கட்டுரை இடையிலேயே நின்றுவிட்டதே!''

''இல்லை, உன்னுடன் பேசியதால் பல புதுக் கருத்துக்கள் கிடைத்துவிட்டது. அவற்றையேஎழுதினுல்கூட என்கட்டுரை அழகாக அமைந்துவிடும்''

பிரதாபன்சென்றவுடன் மீண்டும் கொந்தளித்துக் குமுறும் உள்ளத்துடன் பெளண்டனை எடுத்துக்கொண்டுஉட்கார்ந்தான்

## புற்றுநோய்!

புகைப்பிடிப்பதும் புகையிலையை மெல்லுவதும் புற்றுநோய் வருவதற்கு வழிசெய்கின்றன என்று பிரபல புற்றுநோய் நிபுணர் டாக்டர் போர்ட்மென் கூறுகிருர்.

# கசந்த வாழ்வு!

[எஸ். பாலராசன்—விருதை]

"அம்மா...! தாயே, வயிறு பசிக்குதம்மா! சாப்பிட்டு நாலு நாளாச்சுதம்மா! இந்த ஏழைக்குக் கொஞ்சம் இரக்கம் காட்டுங்கள் அம்மா...!" இந்த அபயக்குரலை அடிக்கடி உச்சரித்துக் கொண்டே நடக்கச் சக்தியற்று தள்ளாடித் தள்ளாடி நகர்ந்து கொண்டிருந்தது அந்த உருவம்!

பரட்டைத்தலை! ஒளியிழந்த கண்கள்! களையற்ற முகம்! உணர்ச்சியற்ற சடலம்! கிழிந்த ஆடை! ஒடிந்த உள்ளம்! உலகத்தையே புறக்கணிப்பதுபோன்ற முகத் தோற்றம்! இதுதான் அவன் இயற்கைத் தோற்றம்! இது அவனுடைய பரம்பரைச் சொத்தல்ல! இடைக்காலத் தோழன்!

"அம்மா...! பாக்கியலட்சுமி ...நீங்க நல்லா இருப்பீங்க! ஒரு பிடி சாதம் போடுங்கம்மா! பசி தாங்க முடியவில்லையம்மா!" என்றான் மீண்டும் ஈனக்குரலில்.

"சே! இதென்ன பெரியதொந்தரவாக இருக்குது! விடிஞ்சதிலேயிருந்து அடைபரவரையிலும் ஏகமா பிச்சைக்காரங்க படையெடுப்பாகத்தான் இருக்கு! பேசாமல் போறியா? சுடுதண்ணீரைக் கோரி மூஞ்சியிலே ஊத்தட்டுமா?" என்றாள் அந்த வீட்டு அம்மணி.

"அம்மா...! மகாலட்சுமி..." அவனும் அசரவில்லை.

"ஏய் சோம்பேறி! எங்கேயாவது வேலை செய்து சாப்பிடக் கூடாது? கழுதை! மூஞ்சைப் பாரு! மூஞ்சை! போ, போ!" இப்படி அந்த அம்மாளின் அர்ச்சனை.

காலையிலிருந்து வீதிவீதியாக வீடுவீடாக, சுற்றியலைந்து அவன் கால்கள் மரத்துப்போய்விட்டன. ஆனால் ஆகாரம்தான் கிடைக்கவில்லை! பிடிசாதத்திற்கு படிப்படியாக ஏறி இறங்கினான். கிடைத்தது வசைமொழிதான்!

அவன் நல்வாழ்வு வாழ்ந்த நாட்களில் எத்தனை மாளிகைவாசிகளுக்கு மானங்காக்க உடைகள் அளித்திருக்கிறான்! "செய்யும் தொழிலில் சீர்தூக்கிப்பார்க்கின் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை கண்டீர்" என்று கூறிய தமிழ்ப்பெருந்தகையின் வாய்மொழியை வாயாரப் புகழ்ந்து போற்றியிருக்கிறான். கட்டுவதற்குத் துணியின்றி இடர்ப்படும் ஏழைகளுக்கு 'இனாமாகக்கூட

எத்தனையோ ஆடைகள் அளித்திருக்கிறான். உழைப்பவன் முதல் உலகாள்வோர்வரை உடுத்தி மகிழ்வது அவனைப் போன்ற பாட்டாளிகளின் படைப்புதான் என்பது 'கனம்'களுக்குத் தெரியாமலிருப்பதற்கில்லை. பட்டாடை நெய்து ரோமாபுரி சென்று 'பாரீர்' என்று தம் திறம்காட்டி புகழ் பரப்பி பரவசப்பட்ட தமிழர்கள், நறிநெசவாளர்கள், இன்று பெரும் தரித்திரர்களாக, தெருத்தெருவாக குடும்பம்குடும்பமாக, நாயினும் கேடாக, பிச்சையெடுக்கிறார்கள்! அவர்களில் ஒருவன்தான் இவனும். "தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அளித்திடுவோம்" என்று பாவாணர் பண் இசைத்த நாடா இது?

அவன் ஒரு பிச்சைக்காரன்! ஆனல் வேலை செய்யாத சோம்பேறியல்ல! இப்பொழுது அனாதைதான்! ஆனல் மனைவி மக்கள் பசியால் துடிக்க, காணச் சகியாமல் ஓடிவந்தவன். இங்கே அவன் வாழ முடியாதவன்! ஆனல் முன்புதன்வீட்டிலே தறிநெய்து செல்வம் கொழிக்க, மனைவி மக்களுடன் மாண்புற வாழ்ந்தவன்! இன்று அந்த எழிலான குடும்பம் சிதைந்து சின்னபின்னப்பட்டுவிட்டது! மனைவி, பிள்ளைகளை விலை கூறுவது ஒருபக்கம்! நெசவு நெய்த நேசக்கரத்திலே, நெடுஞ் சட்டியுடன் திரியும் கணவனின் காட்சி மற்றொரு பக்கம்! நெஞ்சம் குமுறும் காட்சி! ஆனாலும் இன்நாட்டில் எங்கு திரும்பினும் சாதாரணமாகநடக்கிறது! இதற்கு முடிவே கிடையாதா? இந்நிகழ்ச்சிகள் மேலும் வளர்ந்தால் "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத்தேய்க்கும் படை" என்ற குறள் குறுநடை போட ஆரம்பித்துவிடாதா?

உழைக்க மறுப்பவனா? முடியாதவனா? இல்லை! வளமாக வாழ்ந்து சுயநலமிகளின் சதித்திட்டத்தால் வாழ்ந்து கெட்டவன். இவன் மட்டுமா? எத்தனையோ குடும்பங்கள்.

நொந்தஉள்ளத்தோடு அடுத்த வீட்டை அடைந்தான் அவன். உள்ளே நடந்த உரையாடல் காதில் விழுந்தது. சாப்பிடுவதற்கு மகனை அழைக்கிறாள் தாய்! அவன் பசிக்கவில்லை என கூறி மறுக்கிறான். மீண்டும் கொஞ்சமாவது சாப்பிடும்படி கெஞ்சுகிறாள்.

காது கொடுத்துக் கேட்ட அவன்இதயத்திலே ஈட்டிகொண்டு பாய்ச்சுவதுபோல இருந்தது? ஆவலோடும், அவசியம் கிடைக்கும் என்ற எண்ணத்தோடும் மெதுவாகப் பிச்சை கேட்டான். "இல்லை, போ" என்ற அதட்டலோடு 'கதவு' தடார் என்று மூடப்பட்டது.

பொழுதும் சாய்ந்துவிட்டது. அவன் நடையும் தளர்ந்துவிட்

டது. அலைந்ததுதான் மிச்சம்! அயர்ந்து உட்கார்ந்துவிட்டான் அங்கோர் இடத்தில். அவனுக்கு எதிரே ஒரு பழக்கடையில் சீப்புச் சீப்பாக வாழைப் பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தது அவனை வரவேற்பதுபோல. சுற்றும்முற்றும் பார்த்தான். கடையில் ஒரு சிறுவன் மாத்திரம் உட்கார்ந்துகொண்டு இருந்தான். பசி வந்திட பத்தும் பறந்துவிடுமல்லவா—அவன் கை நீண்டுவிட்டது. அடுத்த நிமிடம், 'திருடன்! திருடன்!' என்ற கூச்சல்! கூட்டத்தினரிடையே பிடிபட்டான்! அவன் கையில் ஒரு சீப்பு வாழைப்பழம் இருந்தது. கன்னத்திலே பளார் என்று ஒரு அடி விழுந்தது. அழுவதற்குக் கூட சக்தியற்ற அந்த உடல் துடித்துக் கீழே சாய்ந்தது!

"திருட்டுப் பசங்க! நன்றாய் உதைக்கணும் சார்! இன்று பழம்! நாளை இரும்புப் பெட்டியையே உடைப்பாங்க! இவங்களை சும்மா விடக்கூடாது. போலீசிலே சொல்லி உள்ளே தள்ளுங்க! அதுதான் சரி" என்றார் ஒரு கனவான்.

"வேண்டாம் சார்...பாவம்! வயிற்றுக்கு இல்லாமத்தான் இப்படிச் செய்திருக்கிறான்! மன்னித்துவிட்டுவிடுங்க சார்...போகட்டும்" என்றார் ஒரு அப்பாவி மனிதர்.

வெகு நேரத்திற்குப்பின் கண் விழித்தான் அவனுக்கு இந்த உலகமே இருளடைந்ததுபோல தோற்றமளித்தது! வாழ்க்கையும் கசந்தது. "இன உணர்ச்சியற்ற சமுதாயத்திலே; இரக்கமற்ற சமூகத்திலே, இருப்பதே பெரும் தவறு! ஆம், தவறுதான்! இனி தாமதிக்கக்கூடாது" என்று எண்ணியவாறு எழுந்து வெறியுடன் ஓடினான்! அவன் ஓட்டத்தை யாரும் தடுக்கவுமில்லை தடுக்க முயற்சிக்கவுமில்லை! இன்பம் இடந்தரவில்லை; துன்பம் துரத்தியது. ஆகவே ஓடினான்! ஓடினான்! வாழ்வின் விளிம்பிற்கே ஓடினான்!

'கசந்த வாழ்வை' வெறுத்து மைந்தன் ஓடி வருதைக் கண்ட இயற்கையன்னையாகிய கடல் கொந்தளித்துதனது அலைக்கரங்களால் வாரியணைத்து முத்தமிட்டு தனக்குள் ஏற்றுக்கொண்டாள்.

★

# மாணவர் முன்னேற.....

ஜி. துரைசாமி—(ஜி. டி. நாயுடு)

பட்டம் பெறுவதினால் மட்டும் ஒருவன் படித்தவனாகமாட்டான். படிப்பின் அறிகுறி, மாணவனின் பிற்காலத்தில் வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதே. ஏட்டுப் படிப்பு உதவாக்கரையானது. இன்றுள்ள பள்ளிகளெல்லாம் ஒழிக்கப்பட்டு, அவ்விடங்களில் தொழிற்சாலைகள் ஏற்படவேண்டும். இந்தச் செயலை அமுல்நடத்த அடுத்த ஆண்டில் சுற்றுப் பிரயாணம் செய்து கல்லூரிமாணவர்களைப் படிப்புநிறுத்தம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப் போகிறேன்.

சிகரெட் குடிப்பது கெடுதல். சிகரெட்குடிப்பதினால் உடம்பில் விஷம் ஏற்றப்படுகிறது. ஆண், பெண் கூட்டுப் படிப்பு இந்நாட்டிற்குகந்ததல்ல. சினிமா, நாடகம் முதலிய கேளிக்கைகளை மாணவர்கள் பார்க்கக் கூடாது. காம உணர்ச்சிகளை ஊட்டும் ஆபாசப்பத்திரிகைளைப் படிக்கக் கூடாது. அரசியலிலும், வெளி விவகாரங்களிலும் தலையிடக் கூடாது மாணவனுடைய மனம் கெட்டால் உடலும் கெட்டுவிடுகிறது. பள்ளிகளில் காட்டப்படும் திரைப்படங்களைமாத்திரம் பார்க்கவேண்டும். பள்ளிக்கூட விடுமுறை நாட்களைக் குறைக்க வேண்டும்.

ஒருநாளில் ஒருவேளைமட்டும் பள்ளிகள் நடத்தப்படவேண்டும். மற்ற வேளைகளில் மாணவர்கள் உழைத்துச் சம்பாதிக்க வசதி செய்யவேண்டும்.

பெண்களுக்கு வாழ்க்கைக்கு ஏற்ற விஞ்ஞானக் கல்லூரிகள் தொடங்கப்படவேண்டும் குடும்பவழி கல்லூரிகளையும் தொடங்க வேண்டும்.

நான் ஒரு அனுபவவிஞ்ஞானி கல்லூரிப் பட்டம்பெற்ற விஞ்ஞானி இல்லை. க்ஷவர பிளேடு நவீன முறையில் செய்ததற்காக எனக்கு உலகிலேயே முதல்பரிசு கிடைத்தது. 3 ஆண்டுப்படிப்பு ஓராண்டுப் படிப்பாக மாணவர்களுக்கு மாற்றவேண்டும். $1\frac{1}{2}$ மாதத்தில் வானொலி செய்யும் முறையைக் கற்றுக்கொடுக்கப் படுகிறது எனது பாலிடெக்னிக் பள்ளியில். இதே தொழிலைக் கற்றுக்கொடுக்க மற்றைய பள்ளிகளில் ஆண்டுக்கணக்கில் ஆகின்றன. எனவே இன்றைய கல்வித் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்

[17–2–53ல் திருச்சி அர்ச் சூசையப்பா கல்லூரியில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்]

# நல்ல தர்மம்!

[கிருஷ்ணன்—அருப்புக்கோட்டை]

'மகிழ்ச்சி' பொங்கிச் சிரிப்பாகச் சிந்திக்கொண்டிருந்தது அந்த அறைக்குள். நாராயணனின் தனியறையில் இளம்பெண்ணின் சிரிப்பொலியா? சந்தேகம் பின்னலிடத் தயக்கத்துடன் அறைக்கு வெளியே நின்றேன். ஒரு கணம்தான்! அதற்குள் எத்தனையோ உருத் தெரியாத எண்ணங்கள் எழுந்து நெஞ்சை அரிக்க ஆரம்பித்துவிட்டன திரும்ப யத்தனித்த சமயம் அறைக்குள்ளிருந்து எனக்கு அழைப்பு வந்தது.

எதிர்பார்த்தபடிதான்; இளம் பெண் ஒருத்தி அங்கே நின்றுகொண்டிருந்தாள். அறிமுகமற்ற புதுமுகம். சினிமா வானிலிருந்து திடீரென உதிர்ந்துவிட்ட வடநாட்டு நக்ஷத்திரம் போன்று இருந்தாள் அவள்!

'இச்சுந்தரி யார்?' கேள்வி தொண்டையோடுநின்றுவிட்டது அவராகவே எனக்கு அவளை அறிமுகப்படுத்தி வைத்தார், "இவள் ஒரு அகதியாம் கருணா!"

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. "இவள் அகதியா?!" ஒரு குருடன்கூட இதை நம்பமாட்டான்.

அவள் உடலில் உச்சிமுதல் உள்ளங்கால்வரை 'இவள் அகதியா?' என்ற கேள்விக்கு விடை தேடினேன். வறுமையின் வாடைகூடப் படாது வளம் பெற்று வளர்ந்து பளபளக்கும் உடல்; குதூகலம் கொந்தளிக்கும் முகம்; விஷமம் சிந்தும் அழகிய கண்கள்; குறும்புச் சிரிப்புத் தவழும் இதழ்கள்; உடைகளோ? உயர்ரகம்! 'இவளா அகதி?' என் சிந்தனையை அறுத்துவிட்டு அவர் பேச்சு வளர்ந்தது.

"இவள் பெற்றோரை கல்கத்தாவில் நடந்த கலவரம் விழுங்கிவிட்டதாம். தன் ஒரே சகோதரனுடன் மதராஸ் வந்திருக்கிறாள். அங்கிருந்து......" கதை நீண்டுகொண்டே இருந்தது. என் சிந்தனை மட்டும் 'இம் மாயாமோகினி ஒரு அகதிதானா?' என்ற வினாவுக்கு விடை தேடிக் கொண்டிருந்தது.

"தனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று கேட்கிறாள்... ..' என்று சொல்லிக்கொண்டே இரண்டு பத்துரூபாய் நோட்டுகளை அவள் மென்மையான கரங்களில் வைத்து அழுத்

தினர். அடேயப்பா! அப்போது அவர் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

பணம் பெற்றுக்கொண்ட பாவை பரிவுடன் பார்வை பார்த்துக்கொண்டு தன் இரு கைகளையும் குவித்து ஒரு 'நமஸ்தே' போட்டுவிட்டுத் திரும்பினாள். அவள் நடை ........ அதில்கூட செருக்கும், மிடுக்கும் பின்னி மின்னியதே!

"ஐயோ பாபம்...!" சென்றுவிட்ட சிங்காரிக்காகத்தான் அவர் முணுமுணுத்திருக்க வேண்டும்! அதே சமயம் வேலைக்காரவேலாயி உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்த்ததும் அவர் முகத்திலிருந்த மகிழ்ச்சி மறைந்துவிட்டது.

"ஏன்? என்ன வேண்டும்?" என்று சீறினார். அவள் முகத்தில் வேதனையின் சாயை படர்ந்திருந்தது. பேசுவதற்குக்கூடத் திணறினாள். கண்களினின்றும் 'பொல பொல'வென நீர் சிந்தியது. சிரமத்தோடு, ஒருவாறு துணிவைவரவழைத்துக்கொண்டு பேசினாள்.

"வீட்டில் அவருக்கு...... உடம்பு சரியாய்இல்லை. உடம்பு நெருப்பாய்க்காய்கிறது. இன்று மருந்து வாங்கிக் கொடுக்காவிட்டால்........."

என் நெஞ்சு துணுக்குற்றது. 'இந்த இளம் வயதில் வறுமைக்குக் கணவனைப் பலியிடுவதா? அவனில்லாவிட்டால் அவளுக்கு வாழ்வேது?'

"சீச்சி. எப்போ பார்த்தாலும் இதே இழவுதான். இங்கென்ன பணம் காய்த்தா தொங்குகிறது. இஷ்டமிருந்தால் வேலை செய். இல்லாவிட்டால் எங்கேயாவது தொலைந்துபோ. என்னால் ஒரு காசுகூடக் கொடுக்க முடியாது" என்று பொரிந்துகொட்டினார் அவர். அதற்குமேல் அங்கு அவள் நிற்கவில்லை. விக்கி, விக்கி அழுதுகொண்டே சென்றுவிட்டாள்.

'ஊர்பேர் தெரியாத ஒருத்திக்கு வாரிக்கொடுத்த அவர், தனக்காக உழைத்து உருக்குலைந்து வரும் ஒருத்திக்கு, அவள் எல்லையற்ற தொல்லைப்படும்போது, ஏன் உதவி செய்ய மறுத்துவிட்டார்?' என்மனம் என்னையே கேட்டது .........பதில்.........?

## நீளமாகப் பேசுவதேன்?

"சிறிய பிரசங்கங்களே செய்வதில்லையென்று முடிவு செய்துள்ளேன். நான் செய்த மிகச்சிறிய பிரசங்கமொன்று என்னை ஜெயில் வாசத்துக்கும் அபராதத்துக்கும் ஆளாக்கியதே இம் முடிவுக்குக் காரணம். உப்புச் சத்யாக்ரஹ காலத்தில் நான் ஒரு ஊர்வலத்தை நடத்திச்சென்றபோது உப்பு காய்ச்சப்போவது யார்என்று ஒரு போலீஸ் அதிகாரி கேட்டார். 'நான்' என்று பதிலளித்தேன். அந்த ஒருவார்த்தைக்காக எனக்கு ஆறுமாதக்கடுங்காவலும், ரூ. 200 அபராதமும் விதிக்கப்பட்டது." —K. M. முன்ஷி

# எண்ணுவீர் ஏழையை

(த. கணேசன்—திருச்சேறை)

வடிவ மிக்க வீட்டினிலே
வாழும் உயர்ந்தச் செல்வீர்காள்!
படிக ளமைந்தவ் வில்லினையும்
பழக வழிதனைச் செய்ததார்?
மழையால் நனையும் வீட்டினிலே
மானங் காத்திடும் ஆடையில்லா
ஏழைகள் அன்றோ அமைத்திட்டார்
இதனை நீவிரும் எண்ணுவீரா?

தங்கம் வைரம் அணிந்தவரே!
தகவும் எழிலும் பெற்றவரே!
எங்கும் மதிக்கும் அப்பொருளை
எவர்தான் கொணர்ந்தார் அறிவீரோ?
பொங்கும் வெப்பச் சுரங்கமதில்
பொழுது அனைத்தும் வேலைசெய்து
மங்கும் மாலைநேர மப்போது
வந்திடும் ஏழையானவ னன்றோ?

வண்ணம் மிகுந்தப் பட்டுகளை
வகையாய் உடுத்தும் செல்வீரே!
எண்ணத் தகுந்தவ் வாடைகளும்
எப்படி வந்தது தெரிவீரோ?
கண்ணீர்ப் பொங்கக் கால்கள்நோவ
குடல்கள் துள்ளக் குந்திருந்தார்
மண்ணும் புழுதியும்நிறை யாடையுடன்,
மின்னிடும் அதனைச் செய்தார்கள்.

வெள்ளிப் பாத்திரம் பெற்றுவாழும்
வாழ்வில் உயர்ந்தச் செல்வோரே!
துள்ளி நடையிடும் செல்வீகாள்!
தூய அதுவும் கிடைத்ததேது?
பள்ளம் ஆழமாய் தோண்டிட்டுப்
பார்கள் இடிந்தே விழுந்திடினும்
வெள்ளம் பெருகியே வந்திடினும்
விடாது வேலைசெயும் ஏழையாலன்றோ?

முத்தினை யணிந்திடும் மக்கள்காள்!
மொழிவீர் அதுதான் வந்தவிதம்?
கத்தும் கடலிடை சென்றிட்டுக்
காற்றும் கதிரோன் கொடுமைவிட்டு
மெத்தப் புகழும் முத்துக்களை
மேதினி யெங்கனும் பரப்பிடுவார்
செத்து வாடிடும் ஏழையன்றோ?
சிந்தியும் அவ்வேழை வாழ்வினைநீர்.

## ஒரு பைபிள் 14 லக்ஷம்

மிகப் பழைய 'பைபிள்' புத்தகமொன்றுதான் உலகிலேயே அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டதாகும். 1933ல் இந்தப் புத்தகம் பிரிட்டிஷ் கண்காட்சிசாலைக்காக சுமார் 14 லட்ச ரூபாய் விலைக்கு வாங்கப்பட்டது.

உலகிலுள்ள விலை உயர்ந்த நூல்களில் கொரான் புத்தகமொன்றும் குறிப்பிடப்படுகிறது. இது ஆப்கன் மன்னரால் பாரசீக மன்னருக்கு பரிசளிக்கப்பட்டதாகும், இந்தப் புத்தகத்தை தங்கத் தகடுகள் கொண்டு பைண்டு செய்தார்கள். இதற்கு மட்டும் 4 லட்சம் ரூபாய் பிடித்தது. புத்தகத்தில் 167 முத்துக்களும், 13 இரத்தினங்களும், 109 வைரங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. பம்பாயில் நடைபெற்ற அச்சாளர்கள் மகாநாட்டில் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

# அந்தச் சிரிப்பு!

[இன்முகன்—நாச்சியார்கோவில்]

அவன் சிரித்தான். அவனைச் சூழ்ந்திருந்த அனைவரும் ஆச்சரியப் பார்வையை அள்ளி வீசினர். ஆனாலும் அவன், 'ஓகோ கோ' என்ற ஒலி கிளப்பியவண்ணம் சிரித்தான்.

'ஹ...ஹ...ஹா.........ஹா' தொண்டைவலிதான் ஏற்பட்டிருக்கவேண்டும். தலையும் உடலும் இணைக்கப்பட்டிருந்த எலும்புக் கோர்வையைத் தடவிவிட்டபடியே சிரித்தான்!

அத்தனைக்கும் அவன் வயது 20கூட இருக்காது. சிரித்துச் சிங்காரப் பண் இசைக்க வேண்டிய பருவம்தான் என்றாலும் அவன் சிரித்தமுறை பொருள் புரியக்கூடியதாக இல்லை!

செம்பட்டைத் தலையைக் குலுக்கிவிட்டபடி சிரித்தான்! உடலில் கிடந்த ஒரு பழம் சட்டையைப் பார்த்துச் சிரித்தான்! தான்கட்டியிருந்த மூன்றுமுழத்தைப் பார்த்தும் சிரித்தான்! ஒருவேளை அவற்றின் ஓட்டைகள் எண்ணத் தொலையாதனவாக இருப்பதை நகைச் சுவையாக எடுத்துக்கொண்டானோ என்னவோ?

இதுவரை படித்துவந்த வாசகர்கூட முடிவு செய்திருக்கலாம்! ஆமாம். சிரித்தவன் ஒரு பைத்தியம் என்றுதான் பார்த்தவர் எவரும் நிச்சயித்தார்! ஆனால் அந்தச் சிரிப்பு......

அதோ அவன் சிரிக்கிறான்! அந்தச் சிரிப்பின் எதிரொலிப்பிலே அவன் இதயத் திரையில் ஓடும் நினைவுத் தொடர்.

பெரியசாமி என்ற பெயரை ஆசையோடு அவனுக்கு சூட்டியவள் அவனைப் பெற்றெடுத்த தாய்தான். "தம்பி!" என்று கூப்பிடும்போதெல்லாம் அவன் தந்தைக்கு, தனக்கு ஓரே மகன் தான் என்ற நினைவு எழும்பி உள்ளம் பூரித்த நிலையில் பாசம் படர்ந்து நிற்கும்!

அவனுக்கு எட்டுவயதிருக்கும் போது அவன் குடும்பம் நெல்லை நகரில் 'பண்ணைவீட்டார்' என்ற பெயரோடுதான் இருந்தது.

அவன் தந்தை ஒரு தறிக்காரர். அவரிடம் ஏழெட்டுக் கூலிகள் உடை நெய்தனர். அவனும் அவன் அம்மாவும் அப்போதெல்லாம் கொஞ்சல்விளையாட்டிலும்—கோழி கூப்பிட்டுச் சாப்பிடுவதிலும்தான் பொழுதைக் கழித்தனர்.

வானம் பொய்த்தது. கருமேகம் நீல வானை எட்டிக்கூட

பார்க்கவில்லை! அந்த நிலையிலே தான் 'நூல் பஞ்சம்' தலைகாட்டியது. பண்ணைக்காரர் வீட்டில் கூலிகள் எண்ணிக்கை குறைந்தது

அப்போது அவனுக்கு வயது பத்து. அவன் வீட்டுத் தறிகள் அனைத்தும் சிலந்திக் கூட்டுக்கு இடம் தந்திருந்தன! அவன் தாயின் கழுத்தில் தாலி இல்லை! மஞ்சள் கயிறும் இல்லை! அவளின் அழகானமுகத்தில் ஆசை மகனைக் கண்ட போது கூட மகிழ்ச்சிக்குறி இம்மியளவும் எழவில்லை! இப்போது அவர்கள் இருப்பது நெல்லைநகர் எல்லையிலும் அல்ல!

நூல்பஞ்சம் ஏற்பட்ட இரண்டாண்டுகளில் பண்ணை வீடு அசைந்து ஆட்டங்கொடுத்த நேரத்திலே அவன் தந்தைமானங் காக்க தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொண்டதுவும், அவன் தாய் ஒரே மகனோடு பிச்சையெனக் கேட்டு பிற ஊர்கள் சுற்றுவதும் அவனின் பிள்ளைப் பருவத்திற்கும் குமரப் பருவத்திற்கும் இடைப்பட்ட சரித்திரம்.

வயது பதினேந்தைக்கடந்தது. நிலைமை முழுதும் உணர்ந்த நேரம். தன் துயரக் கதைகேட்டுக் கண்ணீரைக் கொட்டினான். என்றாலும் அவன் தாயைக்கண்ட நேரத்துமட்டும் சோகத்தையெல்லாம் மறைத்துவிட்டு ஒருமங்கிய சிரிப்பு சிரிப்பான். அவள் அதில் அவன் தந்தையின் எரிந்த உடலைக் காண்பாள்!

அகண்ட மரத்தடி, ஹர்ச் சத்திரம், தனியானதிடல் இத்தனையிலும் இருந்தபடி அவன்தாயை அவன் போற்றினான். அதற்கென அவன் 'கூலி, ரிக்ஷா' என்றெல்லாம் பெயர்பெறவேண்டியிருந்தது.

மாட மாளிகை வேண்டாம், தேனும் பாலும் வேண்டாம், தினைக்கஞ்சி தினமொரு வேளை போதும் என்பதுதான் அப்போ

## மணக்க வேண்டாத நான்கு ரகப் பெண்கள்!

லண்டனில் இதுவரை சுமார் 1500 விவாகரத்து வழக்கு விசாரித்துத் தீர்ப்பளித்துள்ள நீதிபதி சகோபுல் ஆம்ஸ்டிராங் பிரிட்டிஷ் யுவர்களுக்கு நான்கு ரகப் பெண்களை மணம் செய்யாமல் ஒதுக்கும்படி யோசனை கூறியிருக்கிறார்.

அவர் கூறுவதாவது:— ஒரு பெண் எப்பேர்ப்பட்டவள் என்பதை அவள் கண்களில் கவனித்தால் தெரிந்துவிடும். கண் பிரகாசமாகஇருக்கவேண்டும். அன்பும்கருணையும் ததும்பவேண்டும்.

(1) பூனைக் கண்ணாக இருக்கும் பெண்ணை ஒதுக்கிவிடுவது நல்லது. (2) பிறரைச் சீர்திருத்த நினைக்கும் மனைவியுடன் வாழ்வது மிகக்கஷ்டம். (3) வேதாந்த மனப்பான்மையுள்ள பெண்களும் வாழ்க்கைக்குலாயக்கில்லை. (4) முட்டாள்தனமானபெண்கள் எவ்வளவுதான் அழகாக இருந்தாலும் ஒதுக்கிவிட வேண்டும். இல்லையேல் முட்டாள் குழந்தைகள்தானே பிறக்கும்.

எக்காலத்தும் மாறுதலை

"கோபுர மார்க்"

தீப்பெட்டிகளே!




சைடு மருந்து
தண்ணீருக்குக் கலையாது.
50 டிக்கிரி பாரன் ஹீட்டில்
குச்சிகள் கழிவில்லாமல்
பொருத்தக்கூடியது.

★

The Southern India Match Co.,
SIVAKASI.

Tel:- "SIMCO"

தைய அவர்கள் கொள்கை! அந்த நேரத்திலே ஒருநாள்!

ஆசையோடு கூலிக் காசோடு திரும்பி வந்தான் அவன். அவளைக் காணவில்லை! "அம்மா!" என்று உரக்கக் கூவினான். பதிலே இல்லை! அது அவனுக்குப் புதிதான அனுபவம்! அழுகை வந்தது! கதறி அழுதான். அக்கம் பக்கத்திலே அலங்கோலமாக ஓடினான். அழுதபடி விசாரித்தான். அங்கே அவனுக்குக் கிடைத்தது "சனியன் தொலைந்தது இந்தப் பஞ்சகாலத்திலே ஏனப்பா உனக்கு அந்தத் தள்ளாத கிழம் வேறே! தாயானு என்ன......நாயின்னு தள்ளு! காலம் சரியில்லே பாரு! இதுக்குப் போயி அழுவறியே! சிரிக்கல்லவேணும்!" ஊரார் ஒருமித்துத்தந்தது இந்த உபதேசம்தான்!

ஒருசிலர் "ஐயோ பாவம்!" என்று அனுதாபம் கொடுத்திருந்தாலுங்கூட அவன் நினைவில் நீடித்து நின்றது பெரும்பாலோரின் உபதேசம்தான்! அவன் சிந்தனை ஓடியது. அதன் முடிவுதான் அந்தச் சிரிப்பு!

'அவன் தாயின் உடல் ஊர்க் குளத்தில் மிதந்து கரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது' என்ற செய்தி அவன் காதில் விழுந்தபோதுகூட அவன் சிரித்துக் கொண்டுதான் இருந்தான்! இப்போதும்சிரித்துக்கொண்டேதான் இருக்கிறான். இதோ அந்தச் சிரிப்பு!

★

# பாசத்திரை

(எஸ். எழில்—ஆரணி)

மழலை மொழி பேசும் மாதவன்; மானைப்போல துள்ளி விளையாடும் மதுரம்; பருவமடைந்த பாவை பார்வதி; கட்டுக்கடங்காத காளையென திரியும் கண்ணன்; இவர்களை தாலாட்டி பாலூட்டி வளர்த்த அன்னை. அண்ணுசாமியின் அன்புத் துணைவி காமாட்சி—கடைசி கட்டத்திலே, ஆம்! சாவின் முனையிலே சமர்புரிந்துகொண்டிருந்தாள். சாவின்பிடியிலே இவள் எம்மாத்திரம்! பலநாள்போராட்டத்திற்குப்பிறகு சாணுகதியடைந்தாள் சாவின்முனையிலே!

தாயின் முடிவைக் கண்டு கதறினுன்—கண்ணீர் உகுத்தான் கண்ணன்! வேறென்ன செய்ய முடியும். கண்ணீர் சிந்திக் கொண்டேயிருந்தால், தன் தங்கைகளின்கதி என்னுவது? சாவு என்றாலே இன்னதென்று அறியாத அன்புத்தெய்வம்—கனிமொழிபேசும் குழந்தைமாதவன் அவனைக் காப்பது தன்னுடைய முதல் கடன். தந்தையோ மனைவியைத்துறந்த ஏக்கத்திலே மருட்சி அடைந்திருந்தார். பிள்ளைகளைத் தேற்றி ஆறுதல் கூறி தாயை மறக்க வைக்கவேண்டிய தந்தையை—தனயன் தேற்ற வேண்டியதாயிற்று.

தந்தையின் துயரம் தணியவில்லை. மனச்சோர்வால் படுத்துவிட்டார். கண்ணனுக்குக் கவலை அதிகமாகியது, கடமையும் துணை போட்டது. ஒருபுறம் தந்தையின் உடல் நிலையைக் கவனிக்க வேண்டும், மற்றோர்புறம் பருவமடைந்த பாவை பார்வதியை இல்லறத்தில் இணைக்கவேண்டும், பள்ளிசெல்லும் தங்கை மதுரத்தைப் பெரியவளாக்க வேண்டிய பொறுப்பு, சிறு குழந்தை, கொஞ்சுமொழிபேசும் மாதவனை மனிதனாக்க வேண்டும். ஆம்! இவ்வளவு பொறுப்பும் கண்ணனைக் கவ்வியது-கடமையென்று! அவனுடைய பருவமோ குடும்ப பாரத்தில் பக்குவப்படாத பருவம். இத்தனை காலமாக குடும்பத்தைப்பற்றியேநினையாதுஇருந்தவனுக்கு நினைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

மூன்று திங்கள் முடிந்தது—கண்ணனின் கண்ணீருடன். தந்தையோ வரவர வாடிக்கொண்டே வருகிறார். கண்ணனால்

காணச் சகிக்கவில்லை. பார்வதியும் தமையனின் நிலையுணர்ந்து நடக்கலானாள். தந்தைக்கு அவளால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஆறுதல் கூறினாள். என்றாலும் எழுச்சி அடையவில்லை தந்தை!

கடைசி முடிவு! ஆம், கண்ணனின் கடைசி முடிவு! தந்தையின் துன்பத்தை—துக்கத்தை துடைக்க ஒரேவழி! ஆம், ஒரே வழி! மணம்—திருமணம்! தயக்கத்துடன் தெரிவித்தான் தங்கையிடம், தன் எண்ணத்தை. அவள் எப்படி மறுக்க முடியும்—சரி என்றாள். தந்தை தனயனுக்கு செய்யவேண்டியதை தனயன் செய்தான்!

* * * *

நல்லநாள் பார்க்கப்பட்டது—சேஷாசலம் அவர்களால்! சாதகம் சரிபார்க்கப்பட்டது—சானகிராமராவ்! நல்ல சுப முகூர்த்த வேளையில் மேளதாளம் முழங்க, வேதியர்கணபதி அலற, உற்றார் உறவினர் உடனிருக்க, மங்களமுடன் திருமணம்நடந்தேறியது—இல்லை, கண்ணனால் நடத்தி வைக்கப்பட்டது; தம்பின் அன்புத் தந்தை அண்ணாசாமிக்கும் பங்கஜத்திற்கும்!

* * * *

இரண்டு ஆண்டுகள் ஓடி ஒளிந்துகொண்டது. இந்த இரண்டு ஆண்டுகளுக்குள்தான் எத்தனை நிகழ்ச்சிகள் — கண்ணனுடைய குடும்பத்தில்! கண்ணனுக்கும்—கனகாவிற்கும் திருமணம்! பார்வதிக்கும் — பெரியசாமிக்கும் திருமணம்! கண்ணனின் சிற்றன்னைக்கு ஆறுமாதக் கைக்குழந்தை! மதுரமோ இரு ஆண்டுகளில் எவ்வளவோ பெரியவளாகப்பட்டாள்! குழந்தை மாதவனோ நடை போட்டுக் கொண்டிருந்தான்! அண்ணாசாமியோ கஷ்டம் என்பதனையேக் காணாமல் களிப்பில் திளைத்திருந்தார்!

* * * *

இந்த மகிழ்ச்சி நிகழ்ச்சிகளுக்கிடையேதான், மரணம்—மாரடைப்பால் மரணம்! யார்? கண்ணனின் தந்தை! அண்ணாசாமி இறந்துவிட்டார்! நகரெங்கும் இப்படிச் செய்தி நிலவியது. கண்ணனின் குடும்பத்திலே மறுமுறையும் குமுறல் காண்டம் தொடங்கிவிட்டது. கண்ணனை கவலை சூழ்ந்தது. பார்வதியோ பேரானந்தமாகத் தன் துணைவருடன் காவிரியூரிலே வாழ்ந்து வந்தாள், செய்தி எட்டியது—துடித்துப் போனாள் தந்தையின் மரணத்தைக் கேட்டு! தனயனை துன்பம் தொடர்வதைக் கண்டு கவலையுற்றாள்—கண்ணீர் உகுத்தாள்! என் செய்வது, எல்லாம் விதியின் விளையாட்டு என்றாள், தலையில் அடித்துக்கொண்டாள்! சிற்றன்னையுடன் கூடியழுதாள், மதுரத்தை தேற்றினாள். அன்று மாலைசவ அடக்கம்நிறைவேறியது

* * * *

அண்ணுசாமியின் ஆசைமனைவி —அழகு மனைவி, இரண்டாம் தாரம் பங்கஜம்—பருவமுள்ள பாவை! இருபது அல்லது இரண்டு அதிகம் இருக்கலாம் அதற்குள் கணவரை இழந்துவிட்டாள். இன்பம் அனுபவிக்க வேண்டிய இளம் வயது, இன்பத்தின் பரிசு சந்திரன்! கைக்குழந்தை! அதற்குள் இன்பம் தந்த துணைவரை துறக்கவேண்டியதாயிற்று. இன்பத்தை இழக்க முடியாத நிலை, அதற்குப் பருவம் வேறு துணை; இன்பத்தையே காணுதவளாக இருந்தால்கூடப் பரவாயில்லை! இரண்டு ஆண்டுகள் அண்ணுசாமியின் அணைப்பிலே —ஆசைமுகத்திலே இன்பத்தை அனுபவித்தவள்! இழக்கவேண்டும்! இழக்கவேண்டும் இன்பத்தை! இப்படி இடிமுழக்கமிடுகிறது சமூகம்! கிடைத்த இன்பத்தை, அனுபவித்தஇன்பத்தை இழக்கவேண்டும்! கட்டளையிடுகிறது சமூகம்! மீற முடியுமா? மீறினுல்தான் சமூகம் சும்மா விடுமா? அதன்வாய் உலர்ந்தா போயிருக்கிறது? அல்லது தைக்கப்பட்டாயிருக்கிறது? இல்லையே, எப்படி முடியும் மீற!

இப்போதுதான், அவள்—யார்? பங்கஜம் பயங்கரப் பாதையில் போகத் தீர்மானித்துவிட்டாள். பயங்கரமானது, பாவகரமானது என்று சொல்லப்படும் பாதை! இரத்தக் கறை படிந்த பாதை! இழுக்கான பாதை! வேசியும் செய்ய வெட்கப்படும் பாதை! காண்போர்—கேட்போர், கேலி —கிண்டல் செய்யும் பாதை! எதற்காக? அவளது ஒரே ஆசை இன்பம்! அனைத்தும் இன்பம்!

துணிந்து பாதையிலே இறங்கிவிட்டாள். ஒரே ஆசை—தசையாசை! அதற்காகவே அடியெடுத்து வைத்துவிட்டாள் அக்கிரமமான—அழிவுப் பாதையிலே!

பங்கஜம் தூபம் போட ஆரம்பித்துவிட்டாள் கண்ணனுக்கு—கனகாவைப்பற்றி! இல்லாததையும் பொல்லாததையும் சொல்வதே இவளின் வேலை! கண்ணன் இதை முதலிலே குடும்பத்தின் வாடிக்கை என எண்ணினுன். அடிமேல் அடியடித்தால் அம்மியும் அகலும் என்பார்களே. அதேபோல் பங்கஜத்தின் தினசரி போதனை, இல்லை, கனகாவைப்பற்றிய தூற்றல் அடிகள் கண்ணனின் உள்ளத்திலே எரிமலையை உண்டாக்கிவிட்டது. கனகாவை ஏதும் கேட்பான்,

**பாரசீகத்தில் மதுவிலக்கு!**

"மதுவும் மாதுவுமே சுவர்க்கம்" என்று பாடிய கவி உமர்க்கயாம் பிறந்த பாரசீகத்தில் இன்னும் சில மாதங்களில் மதுவிலக்கை மேற்கொண்டுவிடும் என்று தெரிகிறது. மதுபோன்ற போதை வஸ்துக்களை ஒழிக்க மஜ்லிகள் கீழ்சபையில் சர்க்காரை வற்புறுத்தி ஏகமனதாக தீர்மானம் 14-2-53ல் நிறைவேறியுள்ளது.

அவள் அத்தையைப்பற்றி எதுவும் சொல்ல அஞ்சி சும்மாயிருந்துவிடுவாள். இது கண்ணனது உள்ளத்திலே குமுறலை அதிகப்படுத்தியதேதவிர தவிர்க்கவில்லை! உண்மையைவிட—உன்மத்தந்தான் மனிதனது உள்ளத்திலே உரம் பெறும் என்பதை எப்படி அறிவாள் அந்த அபலை கனகா! கண்ணனது உள்ளம் மட்டும் என்ன இதற்கு விதிவிலக்கா? அவனுடைய உள்ளமும் உன்மத்தத்திற்கு உரம் அளித்துவிட்டது!

குமுறல்! குமுறல்! கண்ணனுடைய உள்ளமே உருக்குலைந்துவிட்டது. எவ்வளவு நாளைக்குத்தான் அவனுடைய உள்ளம் அந்தக் குமுறலைத் தாங்கும்? ஒரு நாள் அது வெளிப்பட்டுவிட்டது. அதன் விளைவுதான் கனகா தாய் வீடு ஏகவேண்டியது ஆயிற்று. கண்ணனை பிரிய மனமில்லை கனகாவுக்கு! என்றாலும், சிலநாட்கள் தாம்இல்லாமல்இருந்தாலும் அவர் கஷ்டம் இல்லாமல் இருப்பார்—பின்பு எப்படியும் நம்மை வந்து அழைத்துச் செல்வார் என்றஎண்ணத்தின்பேரில் சென்றுவிட்டாள். ஆனால் அவள் எப்படி அறிவாள், இங்கு அத்தையால் இரத்தக் கறை படிந்த படுபாதாளக்குழி தோண்டப்பட்டிருக்கிறது என்பதை!

கனகாவின்பிரிவால் கண்ணன் கஷ்டமே அடைந்தான்! அவனுடைய தங்கை பார்வதி வந்து சிலகாரணங்களைச் சொல்லி மதுரத்தையும்மாதவனையும் ஊருக்கு அழைத்துச் சென்றுவிட்டாள். கண்ணனுக்கு வீட்டில் இருள் சூழ்வது போன்று இருந்தது. குழந்தை சந்திரன் மட்டும் இல்லையானால் உண்மையிலே இருள் சூழ்ந்தேவிட்டிருக்கும் கண்ணனது மனதிலே! அவன் குழந்தை சந்திரனை வீட்டில் உள்ள சிறு ஒளிதரும் விளக்கு என்றே எண்ணிக்கொண்டிருந்தான்.

பங்கஜத்தின் போக்கு வரவர விசித்திரமாகவேபட்டது கண்ணனுக்கு! அவள் நெருங்கினால் இவன் விலகுவான்! அவள் கண்ணனுக்கு பிள்ளைக்குச் செய்யவேண்டிய முறைக்கு மாறாக கணவனுக்கு செய்வதைப்போல செய்துவந்தாள். அவளுக்கு தசையாசையைத் தடுக்க முடியவில்லை. தாகத்தால்தவிப்பவளைப் போலத் தவித்துக்கொண்டிருந்

தாள்—காமம் என்ற தண்ணீருக்காக! அவளால் வரவர உணர்ச்சிகளை அடக்கும் திறன் அற்றுக் கொண்டே வந்தது!

கண்ணன் களைப்பால் கவலையற்றுகண்ணுறங்கிக்கொண்டிருந்தான். பங்கஜத்திற்கோஉணர்ச்சி உச்ச நிலையை அடைந்துகொண்டிருந்தது உடம்பிலே ரத்தம் சூடேறியிருந்தது. மகன் என்ற பாசமும் அற்று இழிசெயலிலே இறங்கிவிட்டாள். கண்ணன் திடுக்கிட்டான், யார்? யார்?என்று துடித்தான். அவளோ கண்ணு! கண்ணு! என்று கட்டியணைத்தாள்—முத்தங்களை முதலாக்கினுள். அம்மா! என்றான் கண்ணன். கண்ணு! அம்மாவென்று அழைக்காதே! பங்கஜம் என்றழை! என்ருள் அவள். அம்மா! இது அநீதி—இழிச்செயல்—குடும்பத்திலே இரத்தக் கறை! வேண்டாம் என்று விலகினன். கண்ணு! கண்ணு! எது அநீதி? என் இளமை பயனைப் பெறுவதா அநீதி! எது இழிச்செயல்? இழந்த இன்பத்தைப் பெறமுயற்சிப்பதா இழிச்செயல்! எனக்கு இப்போது இரத்தக் கறையைவிட பெரிது, இன்பம்! இன்பம்! இது ஒன்றேதான்! கண்ணு! இச்சென்று ஒரு முத்தம் தா...கண்ணு ஒரு அணைப்பு—ஒரே அணைப்புக் கண்ணு! என்று கருத்தழிந்து காமவெறியால் கத்தினுள். கண்ணன் என்ன செய்வதென்றே தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தான்.

*   *   *   *

நாட்கள் கிழமைகளைத்துணைக்கு அழைத்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது—திங்களைப் பிடிப்பதற்கு; அதுவோ ஆண்டை அடைய—அணைக்க ஓடிக்கொண்டிருந்தது.

கண்ணன் வீழ்ந்துவிட்டான்—காமவலையில். எப்படி? பங்கஜத்தின் பார்வையிலே சுருண்டுவிட்டான்! கனிமொழிப் பேச்சிலே சிக்கிவிட்டான்! தாய்—தனயன்! ஊரிலே! வீட்டிலே காதல்சிட்டுகள், காமக் களியாட்டம்! உண்மையை எப்படி மறைக்கமுடியும் உலகத்தினிடத்தில்? தாய்—தனயன் என்ற பாசத்திரையை, உரிமைத்திரையை மூடிக்கொண்டு எத்தனை நாட்களுக்கு ஏமாற்ற முடியும்? ஊரெங்கும் தாய்-தனயன் ஊதாரித்தனம் அம்பலமாகிவிட்டது. அதைக் கண்டும் கவலைப்பட்டதாகக் காணேம், அந்தக் காமக் களியாட்டக்காரர்கள்!

### பட்டினிச் சாவு!

உண்மையான பட்டினிச் சாவுகளை அவ்வாறே பதிவு செய்ய வேண்டுமென கிராம அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதனல் அதிகாரிகளுக்கு எவ்வித கெடுதலும் நேராதென உறுதி கூறுகிறேன். எனது பூரண ஆதரவு உண்டு.

—காமராஜ்

கனகாவுக்குச் செய்தி எட்டியது. துடிதுடித்துப் போனாள். தன்னையேன் அத்தையன்று வெளியேற்ற வைத்தாள் என்பதனையுணர்ந்தாள் — உன்மத்தம் பிடித்தவள்போலானாள். அவள் பெற்றோரோ எல்லாம் 'விதி'யின் விளையாட்டு என்று வீண் ஆறுதல் கூறினர்.

பார்வதியோ பதைபதைத்துப் போனாள். தமையனின் தவறான போக்கைக் கண்டு கலங்கினாள்—கண்ணீர்விட்டாள். தங்கை மதுரத்தையும், தம்பி மாதவனையும் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டாள்.

கண்ணனும் பங்கஜமும் கவலையற்று காமக்குட்டையிலே குதித்துக் கும்மாளம் அடித்துக்கொண்டிருந்தனர்.

நாட்டில் அநேகம்-இதுமாதிரி! தாய்-தனயன் என்ற பாசத்திரையிலே-படுமோசமான பொருத்தமற்ற நிகழ்ச்சிகள் நிறைய நடக்கின்றன—நாட்டிலே! இம்மாதிரி இழிச் செயல்களுக்கு சவக்குழி வேண்டும்! அது என்று வெட்டப்படுகிறதோ அந்நாள் தான் சமுதாயத்தின் மகிழ்ச்சிக்குரிய நாள்! "கணவனை இழந்த விதவையைத்தான் மனைவியை இழந்தவன் மறுமணமாகச் செய்துகொள்ளவேண்டும். புதுமலரை அவன் நாடக்கூடாது" என்ற சட்டம் விரைவிலே வருமா?

சத்திய வேதமாகிய
பைபிளை ஆழ்ந்து படிக்க
வேத மாணாக்கர் ஐக்கிய
சங்கத்தாரால் தமிழில்
வெளியிடப்பட்டிருக்கும்
வேதோபதேசவினாவிடை
என்ற புஸ்தகம்
எங்களிடம் கிடைக்கும்.
விலை: சாதா பைண்டிங்
ரூ. 0—12—0
அட்டைப் பைண்டிங்
ரூ. 0—14—0
தபால் சார்ஜ் வேறு

1, 3, 5, 7, 14, 20 பவுண்டு டின்களில் காபி பவுடர்
சில்லரையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.
சிக்கரி கலந்த காபி பவுடரும் கிடைக்கும்.
எட்வர்ட் காபி ஒர்க்ஸ், விருதுநகர்.

# தேர்ந்த முத்துக்கள்

மனிதன் எதைத் துறந்தாலும் உரிமையைத் துறக்கக்கூடாது; துறந்தால் மனிதனாக இருக்கமுடியாது! —மு. வரதராசனார்

பேசாத வார்த்தைக்கு நீ எசமான்; பேசின வார்த்தை உனக்கு எசமான்! —ஆங்கிலப் பழமொழி

கடன் வாங்குவது பிச்சை எடுப்பதின் அடுத்தபடிதான்.
—ஜெர்மனிய பழமொழி

ம. ஆறுமுகம், கரூர்.

* * * *

பணக்காரன் தங்களுடையசொத்துக்களைப்பாதுகாப்பதற்கு ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு கமிட்டிதான் அரசாங்கம். —கார்ல்மார்க்ஸ

நாட்டின் அரசியல் சீரழிவதற்கு காரணம், அரசியல் வாதிகளுக்கு இடையேயுள்ள ஓயாத உத்தியோக வேட்டைதான்.
—ஆபிரகாம்லிங்கன்

வீரம் என்பது கத்தி வீச்சில் இல்லை. மனோதிடத்தில்தானிருக்கிறது. —நேத்தாஜி

O. P. சாமி, புதுக்குடி.

* * * *

காதல்தான் அறிவாளிகளையெல்லாம் முட்டாள்பட்டத்திற்குஆளாக்குகிறது. —சுகி

உங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க கடன்வாங்கஅஞ்சாதீர்கள்
—ஆசைத்தம்பி

மனிதன் ஒரு விநோதமான பிராணி. கற்பனை செய்து பார்க்க முடியாத உயர்ந்த தன்மைகள் அவனிடம் இருக்கின்றன. இதைப்போலவே கட்டுக்கடங்காததுர்க்குணங்களும் அவனிடம் காணப்படுகின்றன.
—வ. ரா.

ஹெஷ்டர் A. சாம்ஷன், தூத்துக்குடி.

* * * *

புனிதமான எண்ணமும் நிராசையும் தேவையேதவிர நீரில் மூழ்குவதும் நீண்டதூரம் செல்வதும் புரோகிதரின் ஆணைக்கு அடங்குவதும் ஆண்டவனை அடையும் மார்க்கங்கள் அல்ல. —புத்தர்

கடவுள் என்று சொல்லப்படுவது உயர்குணப் பண்பே ஒழிய. அது ஒரு உருவமல்ல, வஸ்துவல்ல.
—ஈ. வெ. ராமசாமி

அ. கிருஷ்ணன், குனியமுத்தூர்.

* * * *

மக்கள் ஒருவருக்கொருவர் மனிதக் குணத்தோடு பழகிவிட்டால் முதன் முதலாக பட்டினியாக சாக வேண்டியவர்கள் வக்கீல்கள்.
—அறிஞர் அண்ணா

செல்வத்தை வெறுப்பது அறிவின் முதற்படி; செல்வத்தை அனைவருக்கும் பகுப்பது அன்பின் முதற்படி.
—ரஸ்கின்

உலகம் வாழத் தெரியாதவர்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும்; வாழத் துடிப்பவர்களுக்குக் குறுக்கே நிற்கும். —அகிலன்

இனம் இனத்தோடு வாழ்வது இயற்கை நியதி. இனவுரிமைக்

கிளர்ச்சியை துப்பாக்கிமுனை நசுக்கிவிடமுடியாது. —லெனின்

உணவை எப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லு; உடையை எப்படி அணியவேண்டும்என்று சொல்லு; ஆனால் திருமணத்தில் மட்டும் தலையிடாதே! அது அவரவர்கள் பிரியம். —ஆமென்

பள்ளத்தை நோக்கிப் பாய்ந்தோடும் காட்டாற்று வெள்ளம் போன்றது மனிதனின் மனம். நல்லது, கெட்டது, உபயோகமுள்ளது உபயோகமற்றது; இன்னின்னது சிந்திக்கலாம், இவை இவை நினைக்கக்கூடாது என்ற வரம்பிற்குட்படுவதில்லை. —மகிழ்ச்சி சதானந்தம்

**V. A. மலை, சூரூர்.**

* * * *

கொடூரமும் பலவீனமும் ஒன்று சேர்ந்த இடத்திலே பொய் பிறக்கிறது. —இங்கர்சால்

மனிதனால் மரணத்தை தவிர்க்க முடியாது என்பார்கள். காதலின் விஷயத்திலும் அது அவ்விதமே பொருந்தக்கூடியது.—காண்டேகர்

நான் கல்லுக்கும் மண்ணுக்கும் பிறக்கவில்லை, ஒரு பெண்ணுக்குத் தான் பிறந்தேன். —கவிஓமன்

எந்தச் சமுதாயம் பெண்களின் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டே போகிறதோ, அது அழிவைநெருங்கிக்கொண்டிருக்கிறது என்றுதான் பொருள். —டி. கே. சீனிவாசன்

**எஸ். எழில், ஆரணி.**

* * * *

பேனா ஒரு போர் முரசு. —கவி லாங்பெல்லோ

நம்நாட்டில், தொட்ட இடத்திலெல்லாம் ஒரு தீய வழக்கம்வந்து குந்திக்கொண்டு சமூக முன்னேற்றத்தைப் பார்த்து கேலிச் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருக்கிறது, இந்த நாகப் பாம்பை தலையில் அடித்துக் கொல்லவேண்டும். —என். எஸ். கிருஷ்ணன்

கடவுள்இருக்கிறாரா—அதுயாருக்கும் தெரியாது. கடவுள்இல்லையா அதுவும் யாருக்கும் தெரியாது. —இங்கர்சால்

**S.இராமானுசம், குல்லலக்குண்டு.**

* * * *

தியாகியின் மார்பிலுள்ள ரத்தக் கரையைவிட, படிப்பாளியின் கையிலுள்ள மைக்கறையே புனிதமானது —நபிகட்திலகம்

ஆண்டவனைத்தேடி எங்கே போகின்றீர்கள்—இவ்வுலகில் வாழும் துன்பப்பட்டவர்கள், பலவீனர்கள் ஏழைகள் இவர்கள் எல்லோருமே தெய்வ வடிவங்கள்தானே? ஏன் இவர்களை முதலில் ஆதரிக்கக் கூடாது? —விவேகானந்தர்

ஆஸ்திகனாயினும், நாஸ்திகனாயினும் உணவு கிடைக்காவிடில் பட்டினியால் வாடுவது நிச்சயம். தெய்வ நம்பிக்கை ஒருக்காலும் உணவளிக்காது. —பிராட்லா

நேற்று புத்திசாலியாயில்லாதவன் இன்று புத்திசாலியாய் இருக்கப்போகிறான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? —ஆபிரகாம்லிங்கன்

**கிரீன்லாம்ப், தென்காசி**

* * * *

மிருகம் தனக்காக வாழ்கிறது, மனிதன் அப்படியல்ல.—கவிதாகூர்

சோம்பிக்கிடப்பது தீமை! நல்ல தொண்டு செய்யாது கிடப்பவன் ஆமை! தேம்பியழும் பிள்ளைபோல் பிறன் தீமை கண்டு அஞ்சுபவன் ஊமை. —பாரதிதாசன்

**ஏர்வாடி பி. எம். அலியார், கொழும்பு-11.**

சென்ற இதழில் "அன்பு மனைவிக்கு" என்று 'விருதைவாசி' எழுதிய தபாலுக்கு 'சென்னைவாசி' பதில் கொடுக்கிறார்.

# பிரியமுள்ள கணவருக்கு......

[சென்னைவாசி]

நான் எதிர்பார்த்தபடியே உங்கள் கடிதம் கிடைத்தது. அதில் தாங்கள் தனியாக இருந்து கஷ்டப்படுவதால் உடனேபுறப்பட்டு வரும்படி எழுதியிருக்கிறீர்கள். ஆனால் தாங்கள் கடிதத்தின் இறுதியில் எழுதிய எழுத்துக்கள் என் நெஞ்சை ஆயிரம் ஊசிகள் கொண்டு குத்துவதுபோல் இருக்கிறது. எவ்வளவு பயங்கரமான வார்த்தைகள். "உடனே புறப்பட்டு வா, அல்லது சாவதற்கு மருந்தையாவது அனுப்பிவை" என்று நீங்கள் எழுதலாமா? இது பித்து மனப்பான்மையுள்ள பெண்களிடமிருந்து வரக்கூடிய வார்த்தைகளா? அல்லது வீரமும் விவேகமும் உள்ள ஆண்களிடமிருந்து வரக்கூடிய வார்த்தைகளா? நீங்கள் இறந்தால் என்னுடைய நிலைமை என்ன? யோசித்தீர்களா? நான் உங்களிடம்வைத்திருக்கும் அன்புக்கு அளவுண்டா? என் அன்பை சோதிக்கும் வார்த்தைகள் இது தானா?

பதினைந்து ஆண்டுகள் தாய் வீட்டில் வளர்ந்த பாசம் அம்மி மிதித்தமாத்திரத்திலேபோய்விட வேண்டுமா? என்னை உள்ளன்புடன் உங்களிடம் ஒப்படைத்தவர்களை தாலிமுடிச்சிலே மறந்துவிடவேண்டுமா?

'பெண்களைப் பொறுத்தவரையில் திருமணம் என்பது மறுபிறப்புதான்" என்று யாரோ சொல்லியது என் ஞாபகத்திற்கு வருகிறது. சாவுக்குபிறகுதான் மறுபிறப்புஎன்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. சாவுக்குப் பிறகுநேரும் மறுபிறப்பில் முன் பிறப்பின் ஞாபகம் வருவதில்லை. ஆனால் திருமண மறுபிறப்பில் இரண்டுஜென்மக் காட்சிகளுமே கண்முன் நிற்கின்றன. பெண்களுக்கு கணவன்தான் தெய்வம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அதனால் பெற்ற தாயிடத்தில் சிறிது அன்பு வைப்பது குற்றமா?

நான் இங்கு வந்து வெள்ளியோடு வெள்ளி எட்டுநாளாகிவிட்டது. நாளை ஒன்பதாவது நாள் புறப்பட்டுவரவேண்டுமென நினைத்தேன். ஆனால் இன்று காலையில் கிணற்றடிக்குப்போன என் தாயார் வழுக்கி விழுந்துவிட்டாள், காயமில்லையானாலும்

எழுந்து நடக்கமுடியவில்லை. என்தாயார் படுக்கையில் கிடக்க நான் எப்படி விட்டுவரமுடியும்?

நம் கலியாணமான மறுவாரத்தில், நாம் இருவரும் ஊருக்குப் புறப்படும்சமயம், என்தாயாரை நினைத்து நான் சற்று தயங்கிய போது, தாங்கள் "பிறந்தகமும் புக்ககமும் ஆற்றின் இரு கரைகளைப்போல" என்று சொன்னீர்களே. இப்பொழுது மட்டும் நான் எங்கேயோ போய்விட்டதாக ஏன்நினைக்கிறீர்கள்? நளன் தமயந்தியை விட்டு விலகியிருந்ததை கட்டுக்கதை என்று சொல்லிவிடுவீர்கள். ஆனால் தேச விடுதலைக்காக மனைவி மக்களை விட்டு எத்தனையோ வாலிபர்கள் சிறைக்குச் செல்லவில்லையா?

தாங்கள் என்னைப்பற்றி ஒரு கனவு கண்டதை அப்படியே எழுதிவிட்டீர்கள் நான் ஒவ்வொரு இரவும், ஏன்? பகலில் கூட உங்களைப்பற்றி கனவுகள் கண்டுகொண்டே இருக்கிறேன். நான் கண்ட கனவுகளைப்பற்றி எழுதுவதானால் பெரிய புத்தகமாகிவிடும்.

நான் முன் எழுதிய கடிதத்தில் அன்பும் அதிருப்தியும் கலந்திருப்பதாக எழுதியிருக்கிறீர்கள். எதிலிருந்து அதிருப்தியைத் தெரிந்துகொண்டீர்கள்? வயிற்றில் மந்தம் விழுந்த குழந்தைக்கு, அதன் தாயார் கசப்பு மருந்து கொடுத்தால் தாயுக்கு குழந்தையிடம் அன்பு இல்லை, அதிருப்திதான்என்று அர்த்தமா?

படித்தபெண்கள் புருஷனிடம் வாதம் செய்வதிலும், புருஷனுடைய பேச்சையும் செய்கையையும் எடைபோடுவதிலும் காலத்தை வீணுக்குகிறார்கள் என்ற உங்கள் நண்பரின் அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறீர்கள். இது வழக்கத்திலிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் தற்கால சினிமாக்களில் நடைபெறுகிறது. படித்த பெண்களால் கணவனுக்கு லாபம் உண்டோ இல்லையோ ஆனால் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்வது படித்த பெண்களால்தான் முடியும்.

கடைசியாக உங்களிடம் ஒரு வார்த்தை. நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும்சரி, இங்கு வந்து ஒருநாளாவது நான் சரியாக சாப்பிடவில்லை. நல்ல பசி இருக்கத்தான் செய்யும். சாதத்தை எடுத்துஒரு வாய்வைத்திருப்பேன் அதற்குள் உங்கள்ஞாபகம் வந்துவிடும். கல்லையும் மண்ணையும் போட்டு ஹோட்டல்கா

### காதலி!

செய்தி என்பது ஒரு காதலியைப் போன்றது. காதலியைப் பெறுவதில் நாம் எவ்வளவு சிரத்தையும் முயற்சியும் எடுத்துக் கொள்ளுகிறோமோ அதேபோல செய்திகளைப் பெறவும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

—பி. டி. ஐ. செய்தி ஸ்தாபன மானேஜர் ஏ. எஸ். பரதன்

ரன் உங்களை எவ்வளவு கஷ்டப் படுத்துகிறானே. இதை நினைத்தவுடன் எனக்கு மறுவாய் சாதம் உள்ளே போகாது.

நேற்று என் தாயாரைப்பார்க்க அடுத்த வீட்டு அம்புஜம் வந்தாள். ஏதேதோ பேச்சுக்கிடையிலே என்னைப்பற்றியும் பேசிக்கொண்டார்கள். நான் குளித்து 3 மாதமாகியதாலும் என்உடம்பு இளைத்திருப்பதாலும் கொஞ்ச நாள் புருஷனைவிட்டுவிலகியிருப்பது நல்லது என்று என்தாயார் அம்புஜத்திடம் சொன்னாள். உண்மையில் என்உடம்பு இளைக்கவுமில்லை. என்மேலுள்ள பிரியத்தால் நான் இளைத்துவிட்டதாக என் தாயாருக்குத் தெரிகிறது. என் தாயார் சொல்லுக்காக இனி நான் உங்களைவிட்டு விலகியிருக்கப்போவதில்லை. தாயார் உடம்பு இரண்டுமூன்று நாளில் குணமாகிவிடும். நானும் புறப்பட்டு வந்துவிடுகிறேன். இனி தாங்கள் கடிதம் எழுத வேண்டாம். எல்லாம் நேரில் வந்தபின்பு பேசிக்கொள்ளலாம்.

தங்களை நேரில் காண
துடிதுடித்து நிற்கும்
உங்கள் கமலா

# இது நிஜமா?

— வாகன் —

### பணி

தாய்ப்பால் சிறந்தது, குழந்தையை நன்கு போஷிக்கும். உத்தியோகங்களில் பெண்கள் அதிகமானால் பால்புட்டிகள் நிறைய விற்பனையாகும். சந்ததியின் பொக்கிஷம் பெண். அவள் நாட்டிற்கு செய்யும்பணி தாய்மை.

—ஒரு குமாஸ்தா

### வெற்றி

உடைந்த சங்கு ஊத்துப் பறியாது. கோர்ட்டில் ஏறிய சதிபதியைச் சேர்த்தாலும் வாழ்க்கை வெற்றி பெறாது.

—ஒரு சந்நியாசி

### ஆதரவு

குற்றவாளி செத்துவிட்டால் அவன் சந்ததியைத் தண்டிக்கிறதில்லை சட்டம்; ஆனால், குணமாகாமல் இறந்துவிட்டாலும் வாரீசிடம் பீஸை வசூலித்துவிடுகிறார்டாக்டர். காதலி காதலன் அன்பை அடையலாம், அவன் சுற்றத்தார் ஆதரவை பெறமுடியாது.

—ஒரு கம்பவுண்டர்

### கர்ப்பத்தடை

பயிரைக் காக்க வேலி தேவைதான். வேலிக்காக இடம் ஒதுக்கப்பட வேண்டியதாகிவிடுகிறது. கடன் வாங்குகிறபோது வட்டிவிகிதம் கவனிக்கப்படுகிறது. அதிகமானால் கஷ்டங்கள் என்று தெரிந்திருந்தும் தேவை அதிகமாக உயரும்போது வட்டி விகிதத்தை எவரும் பொருட்படுத்துகிறதில்லை. 'ஜனப் பெருக்கத்தினால் உணவு நெருக்கடி அதிகரிக்கிறது, கட்டுப்பாட்டை கடைப்பிடியுங்கள்!' என்று அடிப்படை தத்துவம் பேசுகிற அறிஞர்கள்கூட நடைமுறையில் நடக்க முடிகிறதில்லை. ஆகவே எங்கும் எதற்கும் சட்டம்தேவைப்படுகிறது.

—ஒரு பொருளாதார நிபுணர்

### ஜெயம்

ஆண்கள் பெண்களோடு அடுப்பூதுவதிலும் போட்டி போடுகிற காலம் இது! காமத்தீயை வளர்த்துப் பெருக்க தேர்ச்சிபெற்றவர்கள் ஆண்கள்; பலிசுமப்பது, சுமத்தப்படுகிறவர்கள் பெண்கள், ஆண்களை இலகுவில் நம்பினாலும் உடல் வளையாது ஜெயிக்கவேண்டும்.

—திருமதி ஜெயம்

### நலன்

ஒருவனுக்கு நல்லதாகத் தோன்றுவது இன்னொருவனுக்கு கெட்டதாக இருக்கலாம். அவரவர்கள் யோசனையின் போக்கை பொறுத்தது முடிவு. 'அவன் நலனுக்காக செய்கிறேன்' என்று ஒருவன் ஆரம்பிப்பதை 'தன்னலனுக்கு கெடுதல் விளைவிக்கும், பாதிக்கும்' என்று தடுத்தால் ஒதுங்கிவிடவேண்டியது தான்; இல்லையேல், அவன் குற்ற

வாளியாகிவிடுவான். ஒருவன் மீதோ ஒருத்திமீதோ ஒருத்திக்கு அல்லது ஒருவனுக்கு காதல் பிறக்கலாம்; காதலை ஏற்றுக்கொள்ள முன்வராதபோது மறந்துவிடவேண்டும்; இல்லையேல் காமமாகிவிடும். 'இருமனமும் ஒருமைப்படல் காதல்' என்பது முன்னோர் முடிவு.

—ஒரு கிரிமினல் வக்கீல்

## அடிமை

காதலால் ஆண்களும், கலியாணத்தால் பெண்களும் அடிமையாகிவிடுகிறார்கள்.

—ஒரு லேவாதேவிக்காரர்

## எஜமானன்

வீட்டுக் காரியங்களை கவனிக்கிறவள் மனைவி. வேலைக்காரர்கள் செய்கைகளுக்கு பொறுப்பு எஜமானர்கள் என்று சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையைஅனுசரித்துத்தான் இயற்கையாகவே மனைவிக்கு எஜமானன் கணவன் என்று அமைந்திருக்கவேண்டும்.

—ஒரு வக்கீல்

## சட்டம்

சட்டம் என்பதே வட்டம் போன்றது—ஆரம்பமும் முடிவும் தெளிவுபடாது. காதலுக்குக் காரணம் அறிய முடியாவிட்டால் கலியாணம் என்ற முடிவைக் காணமுடியாது. கண்டதும் காதல் என்பது அன்று முளைத்து அன்றேஅழியும் காளான் போன்றது.

—ஒரு கணித ஆசிரியர்

## தேவை

முட்டாளாக இருப்பதைவிட பிச்சைக்காரனாக இருப்பதுமேல். பிச்சைக்காரனுக்குவேண்டியது பணம் மட்டுமேதான். ஆனால் முட்டாளுக்கோ மனிதத்தன்மை தேவைப்படுகிறது. தங்களை அடக்கிக்கொள்ள இயலாத விதவைகளும், விவாகமில்லாதவர்களும் பதிவிரதா தருமம், பிரமச்சரியம் என்று முறையே சொல்லிக்கொண்டு எரிந்து வெந்து வேகிறதைவிட விவாகம் செய்துகொள்ளுவதேமேல். இல்லையேல் விபசாரம் பெருகுகிறதற்கு காரணஸ்தர்களாகிவிடுகிறார்கள்.

—ஒரு ஞானி

## தேவையில்லை

சட்டத்தின்அடிமைகள் அதிகாரிகள், சீடர்கள், வக்கீல்கள். முறையை அனுசரிக்க வேண்டியவர்கள் பெற்றோர்கள். ஒழுக்கத்தை கடைப்பிடித்து காக்க வேண்டியவர்கள் குழந்தைகள். ஒழுக்கமும், முறையும் சரியாக கொண்டு செலுத்தப்பட்டால் சட்டம் தேவைப்படாது.

—ஒரு மாஜி நீதிபதி

## நாணயம்

படிப்பும் பணமும் ஒன்றுகூடுகிறபோது அந்தஸ்து நிலைநிற்கும். அந்தஸ்து நாணயத்தின் வேலி. காதலும் கலியாணமும் ஒன்றுபட்ட இடத்தில் ஒற்றுமை வேலியாகிவிடும்—வெற்றிகரமாக வாழ்க்கை ஓடிக்கொண்டேபோகும்.

—ஒரு பொருளாதார ஆலோசகர்

## அடிப்படை

'பால்கொடுத்தபோது புரையேறிவிட்டதே!' என்று பயந்து பால் கொடுக்கிறதை எந்தத் தாயும் நிறுத்துகிறதில்லை. தாய் குழந்தையின் போஷாக்கையே விரும்புகிறாள். பெண்களைப் பொறுத்தது ஆண்களின் பண்பு. கணவனின் அடிப்படை மனைவியே!

—ஒரு படித்தவள்

★

# சந்தேகம் ஒழிக!

"ஜாலி"

[வாழ்க்கையையொட்டி ஒருவர் 2 கேள்விகளே கேட்கலாம்]

**கிறிஸ்டிமா தங்கராஜ், மதுரை.**

**இல்லறத்தின் பயன் யாது?**

*நன்மக்களைப் பெற்று இன விருத்தியை அளவுடன் பெருக்குவதாகும்.*

**இல்லம் இன்பமாக இருப்பது எப்போது?**

*போதிய செல்வத்துடன் கவலையற்று இருக்கும்போது.*

**நீதி, நியாயம், ஒழுங்கு, தர்மம் எல்லாவற்றிற்கும் அடிப்படை யாது?**

*மனச்சாட்சி.*

**இரா. செல்லத்ரை, மதுரை.**

**உயிரினும் உயர்ந்ததும், தீயினும் அஞ்சவேண்டியதும் யாவை?**

*ஒழுக்கமும், கொதித்தெழுந்த ஏழையின் உள்ளமும்.*

**அறிவு இருக்குமிடத்தில் செல்வமும், செல்வம்இருக்குமிடத்தில் அறிவும் இல்லாமலிருப்பது ஏன்?**

*வெயிலின் அருமை நிழலில் தெரியும் என்றபடி ஒன்றை ஒன்றின் தராதரத்தை விளக்க.*

**இளங்கவி ராஜு, சென்னை.**

**காதலுக்கும் காமத்துக்குமுள்ள வேறுபாடு என்ன?**

*சிறிது வெப்பம் அல்லது காற்றுப்பட்டாலும் கரைந்து தண்ணீராகிவிடும் ஐஸ் போன்றது காமம். ஆனல் காதல் கற்கண்டுபோன்றது.*

**ஒருசீர்திருத்தவாதிக்கு அவன் உயிர் பெரிதா? அல்லது லட்சியம் பெரிதா?**

*சுவரை வைத்தே சித்திரம். லட்சியம் நிறைவேற உயிர்தேவை.*

**கா. ராமர், முத்துலிங்கபுரம்.**

**டெலிவிஷன் காட்சி என்பது என்ன?**

*இப்பொழுது ரேடியோவில், பாடுபவர்களின் குரலைமட்டும் கேட்கிறோம். டெலிவிஷனில், பாடுபவர்களின்சப்தத்துடன் அவர்களின் உருவமும், திரையில் தெரியும்படி (சினிமாபோல்) அமைந்திருக்கும்.*

**கிராமத்தில் வாழ்ந்த ஒருவன் பட்டணத்தில்குடியேறினுல் அவன் மனநிலை எப்படிஇருக்கும்?**

*பொய்யும், புரட்டும், அனுவசியமான ஆடம்பரமும் நிறைந்த இந்தப் பட்டணத்தைவிட்டு என்று கிராமம் போய்ச் சேர்ந்து நிம்மதியடைவோம் என்று இருக்கும்.*

**V. காதர்மைதீன், சேர்மாதேவி.**

**பராசக்தியில் நடிக்கும் சிவாஜி கணேசன் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?**

*சினிமாவில் நடிக்கும் ஆடவர் கட்சியைச் சேர்ந்தவர்.*

**மலையாளப் பெண்கள் ஏன் முண்டுகட்டிக்கொள்ளுகிறார்கள்**

*அந்நாட்டின் ஏழ்மையும், பரம்பரைப் பண்பாடும்.*

## தளவைமுத்து, தளவாய்புரம்.

கலிலியோ, சாக்ரடீஸ் முதலானோர்கள் எதைப் போதித்ததால் அநியாயமாகக் கொல்லப்பட்டனர்

*உண்மையை*

ஆந்திர மாகாணத்தைப் பிரித்துக் கொடுப்பதைப்போல் நமது தமிழ் நாட்டையும் பிரித்துக் கொடுப்பார்களா?

*இப்போதைக்கு இருக்காது. விழிப்புடன் நடந்துகொண்டால் விரைவில் பிரித்துவாங்கலாம்.*

## S. A. கைலநன், சேவூர்

படித்து உலக அனுபவங்களைத் தெரிந்த பெண்களும் விபசாரம் செய்கிறார்கள். படிக்காத பாமரப் பெண்களும் வறுமையை முன்னிட்டு விபசாரம் செய்கிறார்கள். எப்படித்தான் விபசாரத்தை ஒழிக்கமுடியும்?

*வயிறாற உண்ண உணவு கிடைத்து, சட்டம் கடுமையாக்கப்பட்டாலும் இந்த விபசாரம் மட்டும் ஒழியவே ஒழியாது. இது உலகுடன் பிறந்த தொத்து வியாதி.*

பஞ்சத்தால் பாமரர்கள்தான் பாதிக்கப்படுகின்றார்களே யன்றி, பணக்காரர்கள் அல்ல. பணக்காரர் பாதிக்கப்படும் நிலை எப்போது ஏற்படும்?

*ஏழை பணக்காரர் அற்ற சமத்துவ சர்க்கார் ஏற்படும்போது.*

## செ. கணபதி, புதூர்.

எதற்கும் பயப்படுகிறவன் கோழை என்றால், எதற்குமே பயப்படாதவன்......?

*மூடன்*

இன்று 'சமூக சீர்திருத்தவாதிகள்' என்று மார்தட்டிக்கொள்வோர்கள் 'மணம் செய்வதானால் விதவையைத்தான் மணப்பது' என்று உறுதி பூண்டு, அதைச் செயலில் காட்டி வருவார்களானால் நம்நாட்டின் எண்ணற்ற விதவைகளுக்கு விமோசனம் ஏற்படுமல்லவா? இதை ஏன் இவர்கள் செய்ய முன்வரவில்லை.

*உங்கள் கருத்துப்படி அவர்கள் நடந்தால் வீடுகளில் கன்னியர்கள் தொகைதான் பெருகிவிடும். ஏற்கனவேயே நாட்டில் பெண்கள் தொகை அதிகம். மனைவியை இழந்தவர் விதவையைத்தான் மறுதாரம் செய்துகொள்ள வேண்டும் என்று சட்டம் இயற்றினாலே போதும்.*

## M. வடிவேலு, திருவையாறு.

விகடத்துணுக்கு எழுதியனுப்பினால் தங்கள் மகிழ்ச்சியில் பிரசுரிப்பீர்களா?

*பிற பத்திரிகைகளில் இருந்து எடுக்காது சுயமாக எழுதியனுப்பினால் போடத் தயார்.*

## மகிழ்ச்சிப்பிரியன், கோபாலபுரம்

காதல் எல்லையில்லா இன்பத்தைத் தரக்கூடியதாக இருந்தும் முள்ளும், கல்லும் நிறைந்த புதர் எனப்படுவது ஏன்?

*காதல் என்பது பிறர்அறியாது கள்ளத்தனத்திலிருந்து பிறப்பது. எனவே அதைக் கடைப்பிடிக்க பல இன்னல்கள் அடைய வேண்டியதிருக்கிறதால்தான்.*

## ஆர். ராமசாமி, புதுஆயக்குடி

ஒரு வாலிபன் தான் காதலித்த பெண்ணையே திருமணம் செய்து

கொள்வேனென்று கூறியும் பெற்றோர்கள் தடை செய்கிறார்களே ஏன்?

*அவனது வருங்காலவாழ்க்கையிலுள்ள அக்கறையால்இருக்கலாம்.*

**ராஜாஜி இந்த வருடம் மட்டும் மாணவர்களுக்கு வடிகட்டும் முறையைப் புகுத்துவதின் நோக்கமென்ன?**

*இப்பொழுதுதானே அவர் பிரதம மந்திரியாக வந்திருக்கிறார்.*

### மா. துரைசிங்கம், மதுரை.

**செந்நெல் கொழித்த செந்தமிழ் நாட்டில் உண்ண உணவுக்கும் வகையற்ற நிலை ஏற்படுவானேன்?**

*காலத்தில் பெய்யும் மழையின்மையும், அதிகாரிகளிடமும், நிர்வாகத்திலும், மக்களிடமும் நேர்மைக் குறைவுமே காரணம்.*

**பலருக்கு வாழ்க்கையில் கசப்பு ஏற்படுவதேன்?**

*பொருளாதார ஏற்றத்தாழ்வால்.*

### V. செந்தில்நாயகம், உடுமலை.

**சர்வதேச அரசியலில் சகல வல்லமையும் வாய்க்கப்பெற்ற ஒரு அரசியல் வாதி யார்?**

*யாருமில்லை.*

**தமிழ்நாட்டு மாணவர்கள், மாணவிகள் கடமையை விளக்குக**

*கல்வியை முடிக்கும்வரை எவ்வித அரசியல் சுழற்சியிலும் கலந்து கொள்ளாமல் பாடங்களிலேயே கருத்து முழுவதையும் செலுத்த வேண்டும்.*

### அ. வை. சு. மணியன், சென்னை.

**அண்ணாகூறியபடி ஆண்களில் பலர் தூக்குக் கயிற்றினை முத்தமிட்டபின்னரும், பாவையர்களில் பலர் சிறைகளை நிரப்பிய பிறகும் தான் திராவிட நாட்டைப் பிரித்துக் கொடுப்பார்களா?**

*இரண்டும் நிசமும் காரியங்களாகத் தோன்றவில்லை. திராவிடத்தின் ஒரு பகுதியான ஆந்திரா மட்டும் விரைவில் தனித்தியங்கப் போவதாகத் தெரிகிறது.*

### எஸ். ஜெகநாதன், அரையபுரம்.

**படித்த பெண்களுக்கு ஆபத்து உண்டா? உண்டென்றால் தடுக்க என்ன செய்யவேண்டும்?**

*ஆபத்து எல்லோருக்கும் உண்டு. சாமர்த்தியமாக சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி மூளையை உபயோகித்து தடுத்து நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.*

**உண்மையை உணராத மானிடனை என்னவென்றழைப்பது?**

*காலம் வரும்போது உணர்ந்து கொள்வார்கள் அந்த அப்பாவிகள்.*

### R. வரதராஜன், குருவப்பநாயக்கனூர்.

**மகிழ்ச்சி ஆண்டுச்சந்தா கட்டினால் கிராமத்திற்கு தபால்மூலம் வருமா? அல்லது உங்கள் ஏஜண்டுகளுக்குமட்டும்தான் வருமா?**

*தாராளமாக தபால் மூலமே வந்துவிடும். ரூபாயும் மூன்றுதான்.*

அருப்புக்கோட்டை
ஆறுமுகம் களிம்பு
REGD. No. 103710
எந்த ரணமாயிருந்தாலும் இதைத் துணியில் தடவி உபயோகித்தால் சீழ் ஜலத்தை வெளியேற்றி ஆற்றும்
அ. ராம. மு. ஆறுமுக பாண்டியனால் தயாரித்தது.

### கார்டு கட்டுரைப்போட்டி 5 முடிவு

# நான் நடத்த விரும்பும் தொழில்

நலிவுற்ற நாட்டின்நிலை உயர, பொருளாதாரம் பெருக, மக்களிடையே பல்லியல் அறிவுவேண்டும். அவ்வறிவினைப் பெற கல்வி முக்கியம். படித்த ஒருவன் படிக்காதபத்துப்பேரைப் படிக்க வைக்கலாம். பத்துப்பேர் நூறு பேரை. இப்படியே காணின், நம்நாட்டில் எல்லோருமே குறுகிய காலத்தில் படித்தவர்களாக மாறிவிடுவார்கள். இதனால் நாட்டில் அறிவுக்கும், அறிவாளிக்கும் மதிப்பு ஏற்படும். இவ்வறிவினைப் பரப்ப நான் ஆசிரியர் தொழில் நடத்த விரும்புகிறேன்.

வீரஞ் செறிந்த தமிழர்களின் அடிமைத்தளையை அகற்ற, அறிவைப் பரப்ப, பண்டைத் தமிழ் நூல்களின் கருத்தாழத்தை இன்றைய தமிழர்களுக்கு உணர்த்த, உணர்ந்துநடத்த, வீரத் தமிழ்த் தாயார் முன்போல் கற்புநிலை தவறாது வாழச்செய்ய, பெண் கல்வியைப் பெருக்க மக்களிடையே நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் உயிரோடு ஒன்றெனக் கலக்கச் செய்ய, குறிப்பாக அறியாமை இருளே நாட்டில் அற்றுப் போய் அறிவுஒளி எங்கும் உண்டாக—உண்டாக்க நான் நடத்த விரும்பும் தொழில் ஆசிரியர் தொழிலேயாகும். நான் விரும்பும் தொழில் கண்ணிருந்தும் ஒளியற்ற மக்கட்கு ஒளியைக் கொடுக்கும்.

மேற்கு நாடுகளில் படித்தவர்கள் அதிகம். ஆனால் நம் நாட்டில் படிக்காதவர்கள் அதிகம். அங்கே அறிவுக்கு இடம், இங்கே மடமைக்கு இடம். இது ஏன்? அங்கு நடக்கும் அரசியல் முதலில் மக்கட்கு அறிவை கொடுக்க விரும்புகிறது. ஆனால் இங்கு?

எனவே நான் ஆய்ந்துபார்த்தவளவில், நாம் நாட்டுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளில் சிறந்த தொண்டு ஆசிரியர்தொழில் நடத்துதலேயாகும். இது வருவாய் குறைந்ததொழிலாயினும் உயர்ந்த தொண்டுக்கு உரிய தொழில். இத்தொழிலால் எண்ணும்எழுத்தும் மக்கட்கு இரு கண்ணாகும் என்பதில் ஐயமில்லை. எனவே நான் நாட்டுக்குத் தொண்டு செய்ய நான் விரும்புவது ஆசிரியர் தொழிலேயாகும்! என் எண்ணம் நிறைவேற இறைவன் அருள்புரிவாராக!

வாழ்க தொண்டு!

**சொ. இராசன், திருவையாறு.**

(ரூ. 1 பரிசு பெற்றவர்)

படித்துப் பட்டம் பெற்றுத் தொழில்இல்லாமல் வறுமையால் வாடும் இக்காலத்தில் உழைப்பாளிகள் ஒருசிலர் தொழில் நடத்தி குடும்பம் நடத்தலாம் என்று எண்ணுவது இயற்கை தானே! நான் ஒரு ஆசிரியரின் மனைவி. கணவன், இரு குழந்தைகள் உட்பட எங்கள் குடும்பம். இத்துடன் என்னுடைய தாயும் என் வீட்டில் உள்ளார். என் கணவருடைய சம்பளம் 50 ரூபாய் இதில் 5 ரூபாய் பிராவிடெண்ட் பண்ட். வருவது 45 ரூபாய்தான். இதை வைத்துக்கொண்டு எவ்வளவோ சிக்கனமானமுறையில் குடும்பம்நடத்த முயன்றும் முடியாமல் அல்லலுற்றேன். அதனால் ஒரளவு கட்டுப்படுத்துவதற்கு ஒரு தொழில் நடத்த முயன்றுள்ளேன். நானும் தையல் படிப்புப் படித்துள்ளேன், ஆனால் வேலைபார்க்கத்தகுந்த அளவில் சர்ட்டிபிக்கேட்டுதான் இல்லை. அதனால் சொற்ப விலையில் ஒரு தையல் மிஷின் வாங்கி, ஓய்வு நேரங்களில் தையல் தைத்து என் குடும்பச் செலவுக்காக சொற்ப வரும்படியாவது வரட்டுமே என்று திட்டம்வகுத்துள்ளேன். இதன்படி திட்டத்தையும் திடமுடன் நிறைவேற்றிவிட்டேன். இதனால் என்னுடைய குடும்பமும் கஷ்டமின்றி காலம்கடத்துகிறோம்.

கே. லட்சுமி, பொய்யூர்.
(Via) அரியலூர்.

---

## கார்டு போட்டி 6

# மகிழ்ச்சிக்கு எனது யோசனை!

கார்டின் ஒரேபக்கத்தில் உங்கள் கருத்தை எழுதி 25—3—53க்குள் அனுப்புங்கள். சிறந்த ஒன்றுக்கு பரிசு ரூபாய் ஒன்று.

மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

---

நாணயமான தொழில், நால்வர் தூசிக்க வழியற்ற தொழில், தித்திக்கும் கலைத்தொழில், அது தான் சித்திரத் தொழில். சிந்தனையிலே சிங்காரத் தோட்டங்கள் சுழல வேண்டும், மனக்கண்ணிலே மனங்கவர் காட்சிகள் மலர்ந்திடவேண்டும், மலர்ந்திட்ட அக்காட்சிகள் கலந்து வைத்த வர்ணங்களால் கண்ணுக்கு விருந்தாக துலங்கிடவேண்டும், துலங்கிய அப் பெருங்கலை பலர் கைமாறி விலையாக வேண்டும்—கஞ்சர்கள்கூட மனங்கனிந்து காசை அள்ளித்தரும் அளவு சித்திரம் அவரவர் சிந்தனையை பற்றி இழுக்கும் பவளமாக அமைய வேண்டும்—முடியுமா? முழுத் தோல்வியே இதுவரை நான் கண்டது—கைகூட வேண்டும் நான் விரும்பிய அத்தொழில்! வேதனை அகல வேண்டும் அத்தொழிலால்! புகழ் பெற்றே ஆகவேண்டும் அருமை சித்திரத் திறமையால்! என்றே எண்ணி இடைவிடாது முயன்றுகொண்டுள்ளேன்.

டி. வி. மூர்த்தி, மதுரை.

# நாம்

திரைப்பட விமர்சனம்

இளந்தத்தன்
மதுரை

**கதை:** காஷியின் "காதல் கண்ணீரை"த் தழுவி எழுதப்பட்ட இப்படக்கதை வேலைக்காரி—பராசக்தியைப்போல் கவர்ச்சியாக இல்லை! விறுவிறுப்பான நிகழ்ச்சியையும் பெறவில்லை! ஆனால் சீர்திருத்தவாதிக்கு ஏற்படும் இன்னலை நன்றாக விளக்கும்வண்ணம் கதை அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**வசனம்:** பராசக்தியின் வாயிலாகப் பொதுமக்களின் பேராதரவைப் பெற்ற மு. கருணாநிதி இப்படத்தின் வசனத்தை எழுதியிருக்கிறார். பராசக்தியைப் போன்றுவேகமும், விறுவிறுப்புமில்லையாயினும், பரவாயில்லை என்று கூறும்படி அமைந்துள்ளது. வசனத்தில் பொதுவுடைமைக் கருத்துக்கள் பொதிந்திருப்பது வரவேற்கத்தக்கது.

**பாடல்கள்:** பாடல்களையும் மு. கருணாநிதியே இயற்றியுள்ளார். "புதியதோர் பாதை வகுப்போம்—எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று தொடங்கும் பாடல்களில் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன. பல பாடல்கள் இனிய மெட்டுகளில் அமையவில்லை! இரு பொருள் தரும் "அண்ணா வாழ்கவே" என்றபாடலும், "பேசும்யாழே" என்று தொடங்கும் பாடலும் சிறிது இனிமையாக இருக்கின்றன. "ஆயிரம் தெய்வங்கள்" என்ற பாரதியாரின் பாடலைச் சேர்த்திருப்பதைப் பெரிதும் பாராட்டலாம்.

**நடிப்பு:** படத்தின் கதாநாயகனாக வரும் M. G. ராமச்சந்திரன் தன் பாகத்தை உணர்ந்து பாராட்டத்தக்க முறையில் நடிக்கிறார். சந்தர்ப்பமறிந்து உணர்ச்சியாகப் பேசி நம் மனதைக் கவருகிறார். முக விகாரமடைந்ததைக் கண்ணாடியில்பார்த்ததும் வைத்தியரிடம் பதறிப்பேசிநடிக்கும் கட்டம் மிக உயர்ந்தமுறையில் அமைந்திருக்கிறது. ஜமீன்தாராக நடிக்கும் வீரப்பா கோபமாக நன்கு நடிக்கிறார். நம்பியார் நகைச்சுவை ததும்ப நடிக்கிறார். M. G. சக்ரபாணியின் நடிப்பு பரவாயில்லை. M. G. ராமச்சந்திரன் காதலியாக நடிக்கும் V. N. ஜானகி தன் குழந்தையைத் தருமாறு கெஞ்சும் கட்டத்திலும், குருடியாகமாறிய பிறகும் நன்றாக நடிக்கிறார். P. K. சரஸ்வதி நடிப்பில் குறையொன்றுமில்லை. மற்ற நடிகர்களின் நடிப்பு பரவாயில்லை.

போதுவாக: இடைவேளைக்குப் பிறகு படம் அதிக விறுவிறுப்பாகச் செல்கிறது. ஒலி, ஒளிப்பதிவு நன்ருக அமைந்திருக்கின்றன. நாட்டியம் மனதைக் கவரும் முறையில் இல்லை! பட ஆரம்பத்தில் (மழையைப் பற்றி) பகுத்தறிவுப் பிரச்சாரம் கேட்டுப் பெருமிதமடையலாம்! பேய்-பிசாசு போன்ற மூட நம்பிக்கை அழிய வேண்டுமென்று கூறப்படுவது வரவேற்கத்தக்கது! காந்திப்பெரியாரின் "உயிர்ப்பலி ஒழிப்புக் கொள்கை" படத்தில் நிறைவேற்றப்படுவதை பெரிதும் போற்றவேண்டும்! கிராமச் சீர்திருத்தமும் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது! வழக்கு மன்றக்காட்சியில் "எதிர்பார்த்த வசனம்" அமையாதது எல்லோருக்கும் ஏமாற்றமளிக்கிறது. ஜமீன்தாராக வரும் மலையப்பர் M. G. ராமச்சந்திரனுக்கும், அவரது தாயாருக்கும் இழைக்கும் கொடுமையைச் சிறிது குறைத்திருந்தால் நல்ல பொருத்தமாக இருந்திருக்கும்! சிற்சில இடங்களில் காசிலிங்கம் திறமையாக "டைரக்ட்" செய்திருக்கிருர். மு. கருணநிதியின் வசனமும், M. G. ராமச்சந்திரனின் நடிப்பும் படத்திற்கு வெற்றி அளிக்கிறது.

ஜுபிடர்-மேகலா கூட்டுத் தயாரிப்பாகிய 'நாம்' படம் நாம் அனைவரும் பார்க்க வேண்டிய நல்லபடமே!

# அறிவுப் பூங்கா

## உணர்ச்சி

முற்போக்கு வார இதழ்

ஆசிரியர்: கு. சேதுராமன், ஈரோடு.

தனி இதழ் அணு 1
ஆண்டுச் சந்தா ரூ 3—8—0

தன் பெயருக்கேற்ப பல பகுதிகளைக்கொண்டு மிளிர்கிறது.

* * * *

## சுந்தரோதயம்

மாதமிருமுறை

ஆசிரியர்:
எஸ். பாலசுப்பிரமணியன்,
டாஸ்கர் டவுன், பெங்களூர்-1.

இதழ் அணு 4
ஆண்டுக்கு ரூ. 6—0—0

பிரபல யோகாசன நிபுணர் திரு. சுந்தரம் அவர்களின் நெருங்கிய தொடர்பு கொண்ட இதழ். யோக சம்பந்தமான ஆழ்ந்தகருத்துக்களுடன் கதைகளும், வினு,விடைகளும்உள்ளன

* * * *

## ஸ்ரீ சுந்தர பிறப்புவிழா மலர்

[சுந்தரோதயம் வெளியீடு]

ஆசிரியர் சுந்தரம் அவர்களின் 53வது பிறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட இம் மலர் பல அறிஞர்களின் கதை, கட்டுரைகளுடன் மிளிர்கிறது. டிம்மி $\frac{1}{4}$ அளவில் 70 பக்கங்களுடன்கூடிய இதன் விலை ரூ. 1

# ஞாபக சோதனைப் போட்டி 12

[கட்டணம் கிடையாது] முடிவு தேதி: 31—3—53

சரியான விடைக்கு

பரிசு ரூ. 10

ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி அனுப்பினால் பரிசுத் தொகை சமமாகப் பிரித்துக்கொடுக்கப்படும்

வெற்றி பெற்றவர்கள் ஜாபிதாவும் சரியான விடையும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்

| | |
|---|---|
| 1 | — — மே — — |
| 2 | — தா — — — — ம் |
| 3 | பூ — — — |
| 4 | — — ச் — க — கா |
| 5 | — ந்திர — — |
| 6 | — ரு — ண — — தி |
| 7 | ச — தி — — — — |
| 8 | — வ — — |
| 9 | — — த — — — — — ன் |
| 10 | பக்த — — — தாஸ் |

பெயர்..........................................................................................................

விலாசம்.......................................................................................................

ஊர்.................................... ஜில்லா......................................................

## போட்டி நிபந்தனைகள்

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்தால், இதுவரை வெளிவந்துள்ள தமிழ்ப் படங்களின் பெயர்கள் வரும்.

2 முதல் கூப்பன் அச்சுக் கூப்பனிலும், அதன்பின் தனித் தாளிலும் தேவையானவை ஒருவர் எழுதியனுப்பலாம். ஆனால் 100 கூப்பன்களுக்கு ஒரு அச்சுக்கூப்பன்வீதம் எழுதப்படவேண்டும்.

3 எவருமே சரியானவிடை அனுப்பாவிடில், போட்டி ஆசிரியரின் தீர்ப்புப்படி பரிசுத் தொகை பிரித்துக்கொடுக்கப்படும்.

4 31—3—53க்குப்பின் வரும் கூப்பன்கள் நிராகரிக்கப்படும்.

5 உள்ளூர் வாசிகள் நேரில் கொண்டுவந்து கொடுக்கலாம்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம்:

ஆசிரியர், ஞாபக சோதனைப் போட்டி, மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.

## ஞாபக சோதனைப் போட்டி 11 முடிவு

### சரியான விடை

1 என்வீடு
2 வீட்டுக்காரி
3 ஜகன்மோகினி
4 ஏகம்பவாணன்
5 வேலைக்காரி மகள்
6 மாமியார்
7 மைனர் ராஜாமணி
8 கிராமப்பெண்
9 மாயக்காரி
10 வானரசேனை

---

### முதற்பரிசு (ஒரு தப்புள்ள விடை) ரூ. 3 வீதம்

1 S.N.M. சுப்பையா, No. 6/3 பெருமாள் கோவில் வடக்குவீதி, யாழ்ப்பாணம்—பஜார் போஸ்ட் ஆபீஸ்.

2 N. J. ரத்தினம், 8/3 சாவக்காரர் தெரு, விருதுநகர்.

### 2வது பரிசு (2 தப்புள்ள விடை) தலைக்கு 8 அணு விலையுள்ள புத்தகங்கள்

1 K. ராஜம்மா, 44, லக்ஷிமிபுரம் 6வது தெரு, மதுரை.

2 M. S. G. மச்சமேகம், ராஜதுரு விலாஸ் காபிஹோட்டல், உத்தமபுரம்—கம்பம் P. O. (மதுரை ஜில்லா)

3 S. இராமானுசம், குல்லலக்குண்டு P. O. (Via) கொடை ரோடு (மதுரை ஜில்லா)

4 A. ராஜலக்ஷிமி, 5, லக்ஷிமிபுரம், 2வது தெரு, மதுரை.

5 M. R. சாமி, W. M. ஓர்க்ஸ், கேத்தனூர் P. O. (கோவை)

6 சா. விஸ்வநாதன், திருமனூர் P. O. (Via) அரியலூர்—(திருச்சி ஜில்லா)

7 G. R. ராஜ், நடுப்பண்ணை தபால் ஆபீஸ் தெரு, நாகூர்.

8 P. சிவகாமி, ராஜன் பப்ளிஸிட்டி, மதுரை.

[7வது நபர் ஒரே கூப்பன் மட்டுமே எழுதி வெற்றி பெற்றதால் 12 அணுவிற்குப் புத்தகங்கள் அனுப்பப்பட்டது]

மோகன் டிரேடிங் கார்ப்பரேஷன் **Regd. No. 1819**

# திருப் போட்டி-2

முடிவு தேதி: 5—4—53

**பரிசு ரூ. 75**
**1வது பரிசு ரூ. 50**
**2வது பரிசு ரூ. 25**

| | |
|---|---|
| 1 | திருப்பிளாத்துறை |
| 2 | திருச் — — |
| 3 | திருத் — — |
| 4 | திருத் — ங் — ல் |
| 5 | திரு — — — றை |
| 6 | திரு — — — வி |
| 7 | திருவா — — ன் — டி |
| 8 | திரு — — — யூர் |
| 9 | திரு — — வூர் |
| 10 | திரு — — — புலி — ர் |

பெயர்.........................................

விலாசம்.........................................

.........................................

**போட்டி 1ன் விடை**

1. திருமலை
2. திருவாரூர்
3. திருவள்ளூர்
4. திருமங்கலம்
5. திருக்கண்ணபுரம்
6. திருப்பூர்
7. திருக்கழுக்குன்றம்
8. திருக்கோணமலை
9. திருநாகேஸ்வரம்
10. திருத்துறைப்பூண்டி

போட்டி 1 பரிசுத் தொகை கீழ்க்கண்டபடி அனுப்பப்பட்டுள்ளது

முதல்பரிசு ரூ. 50 (2 தப்பு விடை) 13 பேருக்கு தலைக்கு ரூ. 3–12–0

2வதுபரிசு ரூ. 25 (3 தப்பு விடை) 42 பேருக்கு தலைக்கு ரூ. 0–10–0

1 கட்டத்திலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்தால் **திரு** என்று ஆரம்பிக்கும் **ஊர்களின்** பெயர்கள் வரும்.

2 பிரவேசக் கட்டணம் முதற் கூப்பன் **அணா** 3. அடுத்த கூப்பன்களுக்கு அணா 2 வீதம். ரூ 1க்கு குறைந்த பிரவேசக்கட்டணத்தை ஒரு அணாவுக்குக் குறைந்த தபால் தலைகளாக **அனுப்பலாம்.**

3 சரியான விடை **சித்திரை மகிழ்ச்சியில்** வெளிவரும்.

4 கூப்பன்களை வெள்ளைக் காகிதத்திலும் எழுதி அனுப்பலாம்.

5 முடிவு தேதிக்குள் கூப்பன்கள் **அனுப்பப்பட** வேண்டிய விலாசம்:— **திருப்போட்டி-2, மோகன் டிரேடிங் கார்ப்பரேஷன், 26-A, கடலைக்காரர் தெரு, விருதுநகர்.**

6 போட்டி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

**மகிழ்ச்சிக்கும் இப்போட்டிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ஆ-ர்**

செந்தமிழ் நாட்டுச் சிறுவர்களுக்கு
திடகாத்திரமளிக்கும்
சிறந்த உணவு எங்கள்

# ராஜா பார்லி பிஸ்கட்
# ராஜா குளுகோ பிஸ்கட்
# ராஜா ஜிஞ்சர்நட் பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

ASP தயாரிப்பு

## ராஜா பிஸ்கட் கம்பெனி,
***115***, **திண்டுக்கல் ரோடு, மதுரை.**

உரிமையாளர்: ஆ. சங்குபிள்ளை.

கிளை: 2, டவுன்ஹால் ரோடு, காலேஜ் ஹவுஸ்,
L. V. ஷண்முகம் பிள்ளை, மதுரை.

விருதுநகர் கிளை ஏஜண்ட்:
A. ராமகிருஷ்ணன் 7/321, தெப்பம் மேல்பஜார்.

# நேயர்களின் புகைப்படப் போட்டி.



தஞ்சையின் பழம்பெருமையை உணர்த்தும்
''மாடமாளிகையும் கூடகோபுரமும்''

போட்டோ: சா. விசுவநாதன்,
திருமனூர். (திருச்சி ஜில்லா.)



''கார் முகிலை முட்டி நிற்கும்,
கல்விக் கோயில்''

விருதுநகர்
க்ஷத்திரிய வித்தியாசாலா
உயர்நிலைப்பள்ளி.

போட்டோ: வயிசி. சேது.
2/3, முகமதியர் தெரு,
விருதுநகர்.

''இருகிளையாயினும்
ஒருவர்க்கிருக்க
நிழலாகாதே''

போட்டோ:
சு. பழநி,
74, வியாபாரச்
செட்டி தெரு,
கூறைநாடு,
மாயூரம்.

மேற்கண்ட புகைப்படங்கள் பூராவும்
பிரசுரத் தேர்வு பெற்றவையே.

குறிப்பு:— புகைப்படப் போட்டிக்கு படங்கள் அனுப்பினாலே போதும். நெக்கட்டிவ் அனுப்ப வேண்டியதில்லை. படத்தின் விபரமும், படம் எடுத்தவர் விலாசமும் படத்தின் பின்னால் அவசியம் எழுதியனுப்ப வேண்டும். முதலிடம் பெறும் படத்திற்கு ரூபாய் ஒன்று பரிசு அளிக்கப்படும்.

Regd. No. M. 5483. MAHILCHI Mar-April. 53.

யானைக்கும் அடிசறுக்கும்!

ஏமாற்றத்திற்குள்ளாகாதார் யார்?

ஏமாறும், ஏமாற்றும் ரகங்கள் சிலவற்றை

அறிந்து கொள்ள




மகிழ்ச்சி ஆசிரியர்

நா. சதானந்தம்

எழுதிய

# 15 நிமிடங்கள்

படித்துப்பாருங்கள்!

**விலை அணா 4**

தபால் செலவு 0—0—9

---

**22—3—53 முதல் 3—4—53 முடிய.**

**விருதுநகரில் நடைபெறும்**

**7-வது அகில இந்திய பொருட்காட்சியில்**

**நமது**

**"மகிழ்ச்சி இல்லம்" 13-ம் நம்பர்**

# புத்தக ஸ்டாலுக்கு

**விஜயம் செய்யுங்கள்.**

விற்பனைக்கு புத்தகங்கள் அனுப்பிவைக்க விரும்பும் வெளியீடுதார்கள் வகைக்கு மூன்று வீதம் அனுப்பிவையுங்கள். பொருட்காட்சி முடிந்ததும், கணக்குத்தீர்த்து அனுப்பி வைக்கப் படும்.

**மகிழ்ச்சி இல்லம், விருதுநகர்.**

ஆசிரியரும், அச்சிட்டு வெளியிடுபவரும் நா. சதானந்தம்,

சதானந்தா அச்சகம்-மகிழ்ச்சி இல்லம்-விருதுநகர்.